பொதுசன நூலகம்

பக்கங்கள்: பன்னிரண்டு + VIII = 20

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை10 வெள்ளிக்கிழமை (23.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:058

# பாதுகாப்பு வலயம், ஆஸ்பத்திரி மீது நேற்று அகோர ஷெல் வீச்சு; 30 பேர் பலி!

## கடந்த 3 நாள்களில் மட்டும் 67 பேர் மாண்டனர்

கொழும்பு, ஜனவரி 23

அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்த மக்களுக்கான பாதுகாப்பு வலயத்தின் மீதும் வள்ளிபுனத்தில் இடம்பெயர்ந்தியங்கு முல்லைத்தீவு ஆஸ்பத்திரி மீதும் நேற்று நடத்திய அகோர ஷெல் தாக்குதலில் ஆகக்குறைந்தது 30 பொதுமக்கள் பலியாகினர் என்று ஏ.பி. செய்தி ஏஜன்சி தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் மட்டும் முல்லைத்தீவில் ஆகக்குறைந்தது 67 பேர் ஷெல் வீச்சுக்கு இரையாகி மாண்டனர் என்று சுகாதாரத்துறை அதிகாரிகளை ஆதாரம் காட்டி மேலும் தெரிவிக்கப்பட்டது.

மக்களுக்கான பாதுகாப்பு வலயம் தோற்றுவிக்கப்பட்டதாக விமானம்மூலம் துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்ட ஒரு சில மணி நேரத்தில் இடம்பெயர்ந்து வள்ளிபுனத்தில் இயங்கிய முல்லைத்தீவு ஆஸ்பத்திரி மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் உள்ளூர் சுகாதாரத் தொண்டர் கந்தசாமி தர்மகுலசிங்கத்தை மேற்கோள் காட்டி ஏ.பி. செய்தி ஏஜன்சி தகவல் வெளியிட்டுள்ளது.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியான ஒட்டுசுட்டான் பக்கமிருந்தே ஷெல்கள் வந்து வீழ்ந்ததாக மாவட்டத்தின் உயர்சுகாதார அதிகாரியான டாக்டர் துரைராஜா வரதராஜா கூறினார் என்றும் அது தகவல் வெளியிட்டது.

நேற்றைய ஷெல்வீச்சின் போது ஆஸ்பத்திரி பிரேத அறைக்குக் கொண்டு வரப்பட்டவர்களின் சடலங்களில் ஐந்து அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களுடையவை என்றும் அவர் சொன்னார். நேற்றைய ஷெல் தாக்குதலில் மொத்தம் 117 பேர் காயமுற்றனர் என்றும் அவர்களில் 66 பேர் பெண்களும் சிறுவர்களும் என்றும் அவர் கூறினார்.

ஷெல்கள் வீழ்ந்து வெடித்த இடங்களில் ஆங்காங்கே மக்களின் சடலங்கள் சிதறிக்கிடப்பதாகவும் அவை கணக்கில் எடுக்கப்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





இதேவேளை-

மக்கள் பாதுகாப்பு வலயம் மீது தாம் ஷெல்வீச்சு நடத்தவில்லை என்று இராணுவத்தினர் மறுப்பு தெரிவித்தனர். ''ஷெல் வீச்சினால் மக்கள் காயமுற்றிருந்தால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான நிலைவரத்தை மதிப்பிட பிரிட்டிஷ் பிரதிநிதி இலங்கை வருகிறார்

கொழும்பு, ஜன.22

இலங்கையின் மனிதாபிமான நிலைவரம் குறித்து மதிப்பீடு செய்வதற்காக பிரிட்டன் தனது மனிதாபிமான நிபுணர் ஒருவரை இலங்கைக்கு அனுப்பவுள்ளது.

வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான பிரிட்டனின் இராஜாங்கச் செயலாளர் டேவிட் மில்லிடாண்ட் புதன்கிழமை விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து பிறநாடுகளுக்கு இடம்பெயர்ந்தோர் நிலை குறித்து சுயாதீன மதிப்பீடுகள் அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ள பிரிட்டன், இலங்கை அரசுக்கு இந்த விடயத்தில் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பை வருமாறு:-

இலங்கையின் அனைத்துப் பிரசைகளின

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போரை நிறுத்துமாறு இந்திய அரசுக்கு இறுதிக்கெடு; இன்று சட்டப்பேரவையில் தி.மு.க. முக்கிய தீர்மானம்

சென்னை, ஜன.23

இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வலியுறுத்தியும், ஈழத் தமிழர் படுகொலையை உடனடியாகத் தடுத்து நிறுத்தக் கோரியும் இந்திய மத்திய அரசுக்கு இறுதிக் கெடு விதித்து தமிழக சட்டமன்றத்தில் இன்று முக்கிய தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

- இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை தி.மு.க. தலைமைக்கழகம் நேற்று வியாழக்கிழமை மாலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ஆளுநர் உரையில் பக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு நோக்கி மும்முனை நகர்வு ஆரம்பம் புலிகளின் முக்கிய தளம் கைப்பற்றப்பட்டதாம்

கொழும்பு, ஜன.23

சிலாவத்தைப் பிரதேசத்தின் பள்ளிக் குடியிருப்புப் பகுதியில் 59 ஆவது படையணி படை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அதேபோல் 4 ஆவது படையணியினர் புதுக்குடியிருப்புப் பகுதியின் தெற்கில் படை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். மற்றும் உதயன்கட்டுக்குளம் பகுதியிலும் படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்கார தெரிவித்தார்.

பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு முல்லைத்தீவைக் கைப்பற்றுவது தொடர்பில் படையினரின் முன்நகர்வு குறித்து விளக்கமளித்தபோதே இராணுவப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு -

(12 ஆம் பக்கம் பார்க்க)

கணனிச் சிறப்பு மலர் உள்ளே ▶

## யுத்த நிறுத்தம் செய்யக் கோருகின்றது ஜேர்மனி

கொழும்பு, ஜன.23

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்கள் குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ள ஜேர்மனி, உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் பிராங் வோல்டெர் ஸ்டெயன்மெர், வன்னி மக்களுக்கு உடனடி மனிதாபிமான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டுப் பணியாளரை வெளியேற அனுமதிக்குமாறு விடுதலைப்புலிகளிடம் ஐ.நா வேண்டுகோள்

கொழும்பு, ஜன.23

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் வன்னியில் தமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் பணியாற்றும் ஐ.நா. பணியாளர்களை, அங்கிருந்து வெளியேற அனுமதி மறுத்து வருகின்றனர் எனக் கூறும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலைமையகம், ஐ.நா. பணியாளர்களையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் வடக்கிலும் மாகாணசபைத் தேர்தல்

### அமைச்சர் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜன. 23

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கும்வரை படையினரின் யுத்தம் ஒருபோதும் நிறுத்தப்பட மாட்டாது என்று ஊடகத்துறை அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா நேற்றுக் கூறினார்.

புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டபின்னர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பழைய பூங்காவுக்குள் பொதுமக்கள் செல்லத்தடை

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ். பழைய பூங்காவுக்குள் மக்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. அத்தடையை மிறிச் செல்பவர்கள் உடன் கைது செய்யப்படுவார்கள்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்பொழுது அரசாங்க அதிபர் வதிவிடம் அமைக்கப் பட்டுவரும் யாழ். பழைய பூங்கா மதில் அண்மையில் இடம் பெற்ற கடும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது. பூங்காவிற்குள் அரசாங்க அதிபரின் அனுமதி இன்றி எவரும் செல்ல இயலாது என அறிவிக்கப்பட்டிருந்தும், ஒரு சில நபர்கள் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் இராணுவ அதிகாரிகளுக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டு தற்பொழுது இந்தப் பூங்காவிற்குள் எவருமே செல்லக்கூடா என மீண்டும் அறிவுறுத்தப்பட்டுகின்றனர். அவ்வாறு செல்பவர்களை உடனடியாகக் கைது செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் அங்கு இருக்கின்ற இயற்கை வளங்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு பொதுமக்களிடமும் இருக்கின்ற காரணத்தினால் முறைகேடான செயல்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது.

(அ-1)

## வாழ்க வளமுடன்



15.12.2008 அன்று 50 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய எமது பாடசாலையின் பகுதித் தலைவர்

**திருமதி கடம்பமலர் விமலராஜாவை**

வாழ்த்துகின்றோம். அண்மைக்கால பாடசாலையின் வளர்ச்சிக்கு கடந்த இரு தசாப்தங்களாக தமது முழு நேர உழைப்பை நல்கியவர்களில் இவரும் ஒருவர். இவரது சேவை இப்பாடசாலையில் மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

இந்துவின் மைந்தர்கள்
யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது காரியாலய உத்தியோகத்தர்
ந.நவயோகராஜா அவர்களின் தாயார்

**திருமதி ஸ்ரீமதி நமசிவாயம்**

22.01.2009 அன்று காலமாகியுள்ளார்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உதவிப் பணிப்பாளரும் உத்தியோகத்தர்களும்,
கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம்,
யாழ்ப்பாணம்.


## மானிப்பாயில் புதுப்பொலிவுடன் ஆரம்பமாகிறது

**Micro System Development Centre**
Jaffna Road, Manipay

தகவல் தொழில் நுட்பத்துறையில் ஓர் புதிய உதயமாக கணனி சார்ந்த அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் MSDC நிறுவனம் மானிப்பாயில் இன்று (23.01.09) வெள்ளிக்கிழமை உதயமாகிறது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், திணைக்களங்கள், விற்பனை நிலையங்கள், கணனி வைத்திருப்போர், கணனி இல்லாதோர் அனைவருக்கும் எமது சேவைகள் பயனுள்ளதாக அமையும்.

our Services



- ★ Computer Sales & Repairing
- ★ Software Developing
- ★ Web Developing & Networking
- ★ Graphics Works & Video Editing
- ★ Computer Game Cantre
- ★ Typing, Scanning & Printing
- ★ Computer Classes (VB, VB.Net, ICT, GIT)

குறைந்த கட்டணத்தில் எமது சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.



போன்ற அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

எம்முடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பத்தில் உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து எமது சேவைகளை வழங்கவும் முடியும்.

Web Add: www.msdcjaffna.com T.P No. 0772487082
Mail Add: mail@msdcjaffna.com 0779560477
msdcjaffna@yahoo:com 0602218462


# இடம்பெயர்ந்த மாணவர்கள் கணித பாட பரீட்சைக்கு தோற்ற விசேட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜன.23

வடமராட்சி கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து கோப்பாய், மிருசுவில் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஜீ.சீ.ஈ. சாதாரண தர மாணவர்கள் இரத்துச் செய்யப்பட்டு மீளவும் நடத்தப்படும் கணித பாடப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு கோப்பாய் முகாமில் இருந்து தோற்றவுள்ள 7 மாணவர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் மிருசுவில் முகாமிலிருந்து தோற்றவுள்ள 17 மாணவர்களுக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலத்திலும் பரீட்சை நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(1)

# 'தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும்' நூல் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம்,ஜன. 23

சமூகவியல் துறையினரின் ஏற்பாட்டில் கலாநிதி பால.சிவகடாட்சம் எழுதிய ''தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும்'' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக புவியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் இரா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் நூலை வெளியிட்டு வைக்க, பேராசிரியர் கா.குகபாலன் முதற் பிரதியை பெற்றுக் கொள்வார்.

ஆய்வுரைகளை பேராசிரியர் வி.சிவசாமி, வைத்திய கலாநிதி ப.உரோமகேஸ்வரன், வைத்திய கலாநிதி சி.எஸ். யமுனானந்தா, பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி க.குணராசா ஆகியோர் ஆற்றவுள்ளனர். (204)

# தென்மராட்சி தெற்கில் குடும்ப அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம்,ஜன. 23

தென்மராட்சி தெற்கு தளங்கிளப்பு, மறவன்புலோ கிராம அலுவலர் பிரிவுகளில் இதுவரை மீளக் குடியேற முடியாமல் ஏனைய பகுதிகளில் தங்கியுள்ள குடும்பங்களின் குடும்ப அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் பங்கீட்டு அட்டை மீளாய்வு செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் தங்கியுள்ள தளங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய கிராம மக்கள் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(1-207)

## யோகாசன வகுப்புகள்

தாவடியிலுள்ள ஸ்ரீஇராமகிருஷ்ண சமிதி மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 6.30மணிக்கு யோகாசன தியான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளன.

இதில் ஆண்கன், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் பங்குபற்ற முடியும். பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். (1-ரி)

## தேவை

வரவேற்பாளர் (பெண்) கணனி அனுபவம் உள்ளவர்.
சுத்திகரிப்பாளர்(சுகாதார தொழிலாளர்) (ஆண்/பெண்)

நாளை (24.01.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

இடம்:- யாழ் வைத்தியசாலை தொ.பே.021-2223533
இல: 315, பலாலி றோட்
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

# மரண அறிவித்தல்கள்

## சைமன் சுமனாவதி



மாத்தளையைப் பிறப்பிடமாகவும் No.342, பலாலி வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சைமன் சுமனாவதி நேற்று (22.01.2009) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சைமனின் அன்பு மனைவியும் விமலசிறி (அவுஸ்ரேலியா), குணதிலக (மாத்தளை), விமலரஞ்சினி (யாழ்ப்பாணம்), ரூபவதி (மாத்தளை) ஆகியோரின் அன்புத் தாயாரும் லக்ஷ், ஏபிரகாம்லிங்கன் (யாழ்.மத்திய கல்லூரி, ஊழியர்), சிவா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.01.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது 342, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று அதனை தொடர்ந்து தாவடி சேமக்காலையில் பூதவுடல் அடக் கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

342, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆறுமுகம் நடேசு



550/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கலைமணி வீதி, கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடேசு 21.01.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கம் தம்பதியினரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் பரமேஸ்வரி மற்றும் மார்க்கண்டு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விமலாதேவி, ரேவதி, மோகனராணி, சந்தானலட்சுமி, பற்குணராஜா, பாக்கியநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கணேஸ், சிவலிங்கம் மற்றும் கிருஷ்ணர், மாணிக்கம், கமலாதேவி, விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமனும், கௌசல்யா, விமலராஜ், கமலராஜ், கௌசியா, மதிஅழகன், மதிரூபி, ஸ்ரீப்பிரியா, நிறஞ்சன், நிறஞ்சலா, நிருஷா, நிஷாந்தன், நிஷாந்தி, உதயஷாரன், ஜனனி, ஜெயனி, ஜீவனி, சுஜானா ஆகியோரின் பாசமிகு பேரனும், கஜானன், ஹரிசாந், அஸ்வினி, அம்சிகன், ஆருஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமணி வீதி,
கட்டப்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி ஸ்ரீமதி நமசிவாயம் (இளவாலை)



மலேசியா கோலாம்பூரைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் தற்போது சுழிபுரத்தில் வசித்தவருமாகிய திருமதி ஸ்ரீமதி நமசிவாயம் நேற்று (22.01.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - திலகவதி (மலேசியா) தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - மாரிமுத்து (தெல்லிப்பழை) தம்பதியினரின் அன்பு மருமகளும் நமசிவாயம் (ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன்ட்) அவர்களின் அன்பு மனைவியும் நவரத்தினராசா (ஓய்வு பெற்ற உபதபால் அதிபர், இளவாலை), காலஞ்சென்ற சண்முகராசா (தபாலூழியர், இளவாலை) மற்றும் ஜெயரத்தினராசா (உபதபால் அதிபர், மாதகல் மேற்கு), நவயோகராசா (நீரியல்வள திணைக்களம், யாழ்ப்பாணம்), தவயோகராசா (கிராம உத்தியோகத்தர், இளவாலை வடக்கு), சிவயோகராசா (நீதிமன்றம், சாவகச்சேரி), நகுலேஸ்வரராசா (அலுவலர், யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும் யோகேஸ்வரி (ஆசிரியர், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை), தபேந்திராதேவி (தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சிவக்கொழுந்து (தாதி உத்தியோகத்தர், சங்கானை வைத்தியசாலை), சாந்தநாயகி (கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), சிவரூபி (முகாமைத்துவ உதவியாளர், பிரதேசசபை, சுழிபுரம்), பகீரதி (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி), அருந்ததி ஆகியோரின் அன்பு மாமியாரும் கோலாலம்பூரைச் சேர்ந்தவர்களான ஸ்ரீஹரன், ஸ்ரீபதி, ஸ்ரீசோதி, ஸ்ரீதேவி ஆகியோரின் அருமைச் சகோதரியும் கோகிலவதனி, சுதர்ஜன் (சுதன் ஆசிரியர்), தர்ஷிககினி, வித்தியாதரன், நக்கீரன், கஜபா னுஜன், கஜாணா, மதுஷன், ஜெனுஜன், சஞ்சீவன் ஆகி யோரின் ஆசை பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (23.01.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் சுழிபுரத்தில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக திருவடி நிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ந.ஜெயரத்தினராசா
(உபதபால் அதிபர், மாதகல் மேற்கு)
பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை வீதி, சுழிபுரம்

தகவல்:
செ.நமசிவாயம் (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சுயாதீனக் குழுவை நேரில் அனுப்பி உண்மையைக் கண்டறியத் தயாரா?

வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலும் அப்பாவித் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பேரவலங்களை நேரில் சென்று பார்வையிடுவதற்காக சர்வதேச சமூகம் உடனடியாக சுயாதீனக் குழு ஒன்றை அப்பகுதிகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை எழுப்பியிருக்கின்றார்.

இது அவரதும், அவரது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் கருத்து நிலைப்பாடு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த ஈழத் தமிழினத்தின் கருத்தாகவும், நிலைப்பாடாகவும் கூட கொள்ளத்தக்கது.

ஆனாலும், 'ஆசாரி இடங்கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுப்பாரா?' என்ற மாதிரி, சர்வதேச சமூகம் தனது பிரதிநிதிகள் குழுவை இவ்விடயத்தைக் கவனிப்பதற்காக அனுப்பி உதவ முன்வந்தாலும் கூட, இலங்கை அரசு அதற்கு அனுமதிக்குமா என்பதே முக்கிய கேள்வியாகும்.

மனிதப் பேரவலத்துக்குள் சிக்கி, சொல்லொணாத் துன்ப, துயரங்களையும், பேரழிவுகளையும், நாசங்களை யும் சந்தித்துத் துவண்டு கிடக்கும் ஈழத் தமிழர்களுக்கு குறைந்தபட்சம் மனிதாபிமான உதவிகளையாவது நேரில் சென்று விரைந்து வழங்க ஐ.நா.முகவர் அமைப்புகளும், முக்கிய - அரச சார்பற்ற - சர்வதேச தொண்டு நிறுவனங்களும் தயாராகவே உள்ளன.

அதேபோல, தேவைப்பட்டால் நிலைமைகளை நேரில் கண்டறிந்து வருவதற்காகத் தனது பிரதிநிதிகள் குழுவை இலங்கைக்கு அனுப்புவதற்கும் சர்வதேசம் பின்நிற்காது என்பது உறுதி.

ஆனால் அதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்குவது துர்லபம் என்பதால், இலங்கை அரசு தமிழர் தாயகம் மீது தொடுத்திருக்கும் கொடூர யுத்தத்தினால் அப்பாவித் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மிக மோசமான பாதிப்புகளை சர்வதேசத்தின் சுயாதீனக் குழு ஒன்று நேரில் கண்டறிவது என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

தமிழர் தாயகப் பகுதி மீதான தனது இராணுவக் கெடுபிடி நெருக்குவாரத்தைத் தீவிரப்படுத்த முன்னர் இலங்கை அரசு எடுத்த முதல் நடவடிக்கை, அந்தப் பிரதேசத்தில் நிலைகொண்டு பணியாற்றி வந்த ஐ.நா. முகவர் அமைப்புகளையும், சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் அமைப்புகளையும் அவற்றின் பிரதிநிதிகளையும் அங்கிருந்து வெளியேற்றியதுதான். தான் அப்பிரதேசம் மீது தொடுக்கப்போகும் ஈவிரக்கமற்ற கொடூர யுத்தத்தால் அங்கு உருவாகக் கூடிய மனிதப் பேரவலம் பற்றிய உண்மை நிலைவரத்தை வெளியுலகுக்கு மூடிமறைப்பதற்காகவே - முற்கூட்டிய எச்சரிக்கை நடவடிக்கையாகவே - சர்வதேசப் பிரதிநிதிகளை அங்கிருந்து வெளியேற்றியது கொழும்பு என்பது வெளிப்படையான உண்மை.

அப்படியிருக்கையில் இப்போது மிகமிக மோசமான மனிதப் பேரவலம், கொழும்பு ஆரம்பித்துள்ள கொடூர யுத்தத்தினால் எழுந்துள்ள சூழலில், இக்கட்டத்தில் சர்வதேசப் பிரதிநிதிகளை அங்கு அனுமதித்துத் தனது குட்டை உடைத்துக்கொள்ள - அம்பலப்படுத்த - அரசு முன்வரவே மாட்டாது என்பது உறுதி.

ஐ.நா.முகவர் அமைப்புகள் மற்றும் உள்நாட்டு, சர்வதேச தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் அப்பிரதேசத்தில் தங்கியிருப்பது அவர்களின் உயிருக்கு ஆபத்தானது என்று கூறியே அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியிலிருந்து அவர்களை வெளியேற்றியது கொழும்பு. அங்கு யுத்தம் மென்மேலும் நெருங்கி வந்து - மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கையில் - அதே பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி, சர்வதேச சுயாதீனக் குழுவின் உத்தேச எத்தனத்தையும் வெட்டிப்போட்டுவிடும் என உறுதியாக நம்பலாம்.

ஏற்கனவே வடக்கில் அரசின் மனிதாபிமானத் திட்டங்களுக்கு உதவுவதற்கான நிதியை வழங்குவதற்கு உறுதியளித்துள்ள பிரிட்டன், அதனை வழங்க முன்னர் நிலைமையை நேரில் மதிப்பீடு செய்வதற்காக இலங்கைக்கு ஒரு கண்காணிப்பு நிபுணரை அனுப்பத் தீர்மானித்திருக்கின்றது.

இப்படி இலங்கை வரும் சர்வதேசப் பிரதிநிதிகள், கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் யுத்த களத்துக்கோ, யுத்த களங்களைத் தாண்டித் தமிழர்கள் பேரவலப்படும் வன்னிப் பிரதேசங்களுக்கோ செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் கொழும்பில் தொங்கிக் கொண்டிருந்தபடி, தமிழர் தாயக நிலைமை குறித்து கொழும்பு அதிகாரிகள் வழங்கும் புள்ளி விவரங்களை உள்வாங்கிக்கொண்டு, அதனடிப்படையில் தீர்மானங்களை எடுத்துத் திரும்பிச் செல்ல வேண்டியதுதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. சொல்வது போல சர்வதேசப் பிரதிநிதிகள் குழு ஒன்றை நேரடியாக இப்பிரதேசங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு கொழும்பு அரசு இணங்குமானால், அப்பிரதேச மக்களின் பேரவல நிலைமை மட்டுமல்ல, அந்த மக்களைப் புலிகள் தங்களுக்கு மனிதக் கேடயமாகத் தடுத்துச் சிறை வைத்திருக்கின்றார்கள் என்ற அரசுத் தரப்பின் குற்றச்சாட்டில் உள்ள உண்மைத் தன்மையும் கூட அம்பலமாகிவிடும்.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சிக்குண்டுள்ள சுமார் நான்கு லட்சம் அப்பாவி மக்களை நாலாபுறத்திலும் நெருங்கி - நெருக்கி - அவர்களின் பிரதேசங்களை ஆட்லறிகள், பீரங்கிகள், ஷெல்கள், பல்குழல் ஏவுகணைகளால் எந்நேரமும் பதம்பார்த்து, தனது முழுமையான சூட்டு வலுவையும் அவர்கள் மீது ஏவிவிட்டபடி, அந்த மக்களின் நலன் குறித்து உதட்டளவில் அதிகப் பிரசங்கித்தனமாகக் கவலை தெரிவிக்கும் கொழும்பு, இப்போது சம்பந்தன் எம்.பி. கூறுவது போல சர்வதேசத்தின் சுயாதீனக் குழு ஒன்றை அப்பிரதேசங்களுக்குச் சுதந்திரமாகச் செல்ல அனுமதித்து, உண்மையைக் கண்டறிவதற்கு இணங்குமா?



கோண்டாவில் அரச களஞ்சியத்தில் பொருள்களை இறக்குவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிகள் ஆயுததாரிகளினால் உடைத்து நொறுக்கப்பட்டன.
இந்த சம்பவத்தில் உடைக்கப்பட்ட லொறிகளில் ஒரு பகுதியைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# கோண்டாவில் அரச களஞ்சியத்தில் நின்ற லொறிகள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன.23

கோண்டாவில் அரச களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிகள் ஆயுதங்கள் சகிதம் வந்த இளைஞர் குழுவொன்றினால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை அரச களஞ்சியத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்த ஆயுததாரிகள் காவலாளிகளை எச்சரிக்கை செய்துவிட்டு இந்த அடாவடித்தனமான செயலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞர்களைக் களஞ்சியசாலையில் நின்ற லொறிகளின் உரிமையாளர்களும் சாரதிகளும் பிடிக்க முற்பட்டனர். எனினும் அவர்களைத் தாக்கி விட்டு குறிப்பிட்ட இளைஞர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

லொறிச் சாரதிகள் விடாது அவர்களை விரட்டிச் சென்று குறிப்பிட்ட சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களில் ஒருவரைப் பிடித்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த சம்பவத்தில் பன்னிரெண்டு லொறிகள் அடித்து உடைக்கப்பட்டுள்ளன. (202-68)

# சந்தேகத்தில் ஐவர் கைது

கோண்டாவில் அரச களஞ்சியசாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிகள் அடித்து உடைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஐந்து பேரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றையதினம் லொறிகள் உடைக்கப்பட்ட இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். உடைக்கப்பட்ட வாகனங்களில் இருந்து கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் மேலும் சிலரைப் பொலிஸார் தேடி வருவதாகவும் தெரிய வருகின்றது. (202-68)

# லொறிச் சாரதிகள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

கோண்டாவில் அரச களஞ்சியத்தில் நிறுத்தப்பட்ட லொறிகள் இளைஞர் குழுவினரால் அடித்துடைக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வியாழக்கிழமை காலையில் சுமார் 300க்கும் மேற்பட்ட லொறி உரிமையாளர்கள் சேவைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டார்கள்.

நேற்று வியாழக்கிழமை காலை கோண்டாவில் அரச களஞ்சியத்தின் முன்னால் கூடிய உரிமையாளர்கள் குறிப்பிட்ட சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி இப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டார்கள்.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், ஊரெழு, கோண்டாவில் பிரதேச இராணுவ பொறுப்பதிகாரி, கோப்பாய், தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொண்டனர். அதைத் தொடர்ந்து மீண்டும் லொறிகள் நண்பகலின் பின்னர் சேவையில் ஈடுபடத் தொடங்கின.

இந்த நடவடிக்கையினால் நேற்றுப் பகல் காங்கேசன் துறைமுகத்தில் இருந்து பெருள்கள் ஏற்றி இறக்கும் நடவடிக்கையும் பாதிக்கப்பட்டது. (202-68)

# ஒரே சூலில் 3 குழந்தைகள்

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ். போதனா வைத்தியசாலையில் இளம் தாய் ஒருவர் ஒரே சூலில் 3 ஆண் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த விமல தீபன் மதனா(வயது -21) என்னும் இளந் தாய் நேற்று இம் மூன்று குழந்தைகளையும் பிரசவித்துள்ளார்.

(202-78-25)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் இரு வாரங்களுக்கான நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பிரகாரம் 87498 குடும்பங்களைச் சேர்ந்த 266910 அங்கத்தவர்களிற்கு உலக உணவுத் திட்டத்தினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இருவார நிவாரண விநியோகம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்கள், 11.08.2006க்கு முன்னர் இடம்பெயர்ந்த குடும்பங்கள் 31.12.2007 உடன் நிவாரணம் நிறுத்தப்பட்டு பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டோர் என்ற வகுதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்த குடும்பங்கள் இந்த நிவாரண விநியோகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்கள் 11.08.2006இற்கு முன்னர் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பொருள்களின் மொத்த அளவில் இருந்து அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணப்பொருள் அளவினைக் கழித்து மீதி உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இந் நடவடிக்கை வெள்ள நிவாரணம் பெறுகின்ற அனைத்துக் குடும்பங்களும் ஒரே அளவான பொருள்கள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள் ளப்பட்டுள்ளது.

31.12.2007உடன் நிவாரணம் நிறுத்தப்பட்டு பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டோர் என்றவகுதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்த குடும்பங்களிற்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படுகின்ற நிவாரணப் பொருள்கள் முழுமையாக வழங்கப்படுகின்றது. மேற்படி வெள்ள நிவாரண விநியோகமானது அதிக பட்சமாக நான்கு அங்கத்தவர்களிற்கே வழங்கப்படுகின்றது. அத்துடன் 11.08.2006இன் பின்னர் இடம்பெயர்ந்த குடும்பங்களிற்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படுகின்ற நிவாரணம் தொடர்ந்து வழங்க எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரண விநியோகத்திற்கான வழங்கற் கட்டளைகள் சகல ப.நோ.கூ. சங்கங்களிற்கும் வழங்கப்பட்டுள்ளன. இதுவரையும் வழங்கற் கட்டளைகளிற்கு பொருள்களைப் பெற்றுக் கொள்ளாத ப.நோ.கூ.சங்கங்கள் அனைத்துப் பொருள்களையும் 24.01.2009இற்கு முன்னர் களஞ்சியங்களிலிருந்து பெற்றுக்கொள்ளவும்.

அத்தோடு மேற்படி உணவு விநியோகத்தினை 26.01.2009இற்கு முன்னர் ஆரம்பிக்க சலக பிரதேச செய[லர்]களிற்கும் அறிவுறுத்தல் வழங்[கப்]பட்டு உள்ளது. இதற்கேதுவாக பயனாளிகளின் பட்டியலினை மேற்படி திகதிக்கு முன்னர் (26.01.2009) உரிய ப.நோ.கூ.சங்கங்களிற்கு வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சகல பிரதேச செயலர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எனவே தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் எதிர்வரும் 26ஆம் திகதியிலிருந்து உரிய ப.நோ.கூ. சங்கங்களிலிருந்து இந்த நிவாரணத்தினைப் பெற்றுக்கொள்ளும்படி அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (202)

## நாளை

| | |
|---|---|
| தை 11 | 24.01.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | மு.ப.10.11வரை |
| நட்சத்திரம்: | பூராடம் |
| | முழுவதும் |
| சுபநேரம்: | 03.36 - 05.06 |
| ராகுகாலம்: | 09.36 - 011.06 |

2008 ஆம் ஆண்டில்

# யாழ்.பிரதேச அபிவிருத்திக்கென 58 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன.23

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டில் யாழ்.பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் 73 வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கென 58 லட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய தொழில் ஊக்குவிப்பு, கலாசார அபிவிருத்தி, விளையாட்டுக் கழகங்களின் மேம்பாடு, சனசமூக நிலைய அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி போன்ற விடயங்களை முன்னுரிமைப்படுத்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் பிரதேச செயலகத்துக்கு 28 வேலைத்திட்டங்களுக்கென 23 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் யாழ். மாநகர சபைக்கு 26 வேலைத்திட்டங்களுக்கென 17 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் -

யாழ். கல்வி வலயத்துக்கு 18 வேலைத் திட்டங்களுக்கென 15 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு ஒரு வேலைத்திட்டத்துக்கென 80 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது ரோயல் குளுக்கோஸ் என்று கேட்காமல்

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0112334603

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீ நாராயணைப் புடவைகள் [?]

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## மாணவர்களுக்கு 'ரின்' மீன்

யாழ்ப்பாணம், ஜன.23

வலி.கிழக்கு பாடசாலைகளில் மாணவர்களின் மாலை உணவில் 'ரின்' மீனும் வழங்கப்பட்டு வருகின்றது.

சில பாடசாலைகளில் மரக்கறி சாப்பாட்டுடன் இந்த ரின் மீனும் சமைத்து மாணவர்களுக்கு நண்பகல் உணவுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை தற்போதைய மரக்கறி விலைகளின் வீழ்ச்சியை அடுத்து பாடசாலைகளில் மதிய உணவிற்கான கறிப்பிரச்சினை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-224)

## கூட்டம்

யாழ்பாணம், ஜன.23

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கத்தின் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும்.

சங்கத் தலைவர் நா.தண்டாயுதபாணி தலைமையில் நடைபெறும் கூட்டத்திற்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட ஓய்வூதியச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் கலந்து கொள்வர்.

(202- 207)

## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உதவி

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சோப் வகைகளை வழங்கினர்.

நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் இத்தகவலைத் தெரிவித்தார்.

(202-207)


## ஒத்துமாறல்

திகழ்ச்சித்திட்ட உதவியாளராக திருகோணமலை நகரில் கடமையாற்றுபவர் யாழ்.மாவட்டத்திலுள்ள நிகழ்ச்சித்திட்ட உதவியாளருடன் ஒத்து மாற விரும்புகின்றார்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.: 060 2218213

## வீடு விற்பனைக்கு

புதிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

சனி, ஞாயிறு பார்வையிடலாம்.

தொடர்பு: ச.ரிஷிகேசன்,

37/1A, முத்துமாரி அம்மன் மேறகு வீதி,

சிவன் அம்மன் றோட், திருநெல்வேலி.

தொ.பே.: 021- 4590067, 077- 1120314.

(83063)


## முதலாம் ஆண்டு நினைவுகளில்

மலர்வு 30 . 05 . 1948

உதிர்வு 04 . 02 . 2008



### அமரர் அழகரத்தினம் கனகசபை

(பிரதி அதிபர், யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலம்)

திதி: 23.01.2009

காலனவன் கவர்ந்து சென்ற திதி
கனப் பொழுதில் வந்ததுவோ!
கண்காணாத் தூரம் சென்று
காலம் ஒன்று கடந்ததைய்யா
நின் நினைவினால் வாடும் உறவுகளைத் தேற்ற
ஓடிவிங்கு வாராயோ.

மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனிமார், மைத்துனர்கள், மருமக்கள்.

(இ/556861)

## மரண அறிவித்தல்



### அன்ரன் தவசிங்கம் எட்வேட்ஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நவாலி சின்னப்பா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் தவசிங்கம் எட்வேட்ஸ் (21.01.2009) புதன்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான பாலசிங்கம் எட்வேட்ஸ்- கிறேஸ்செல்வம் தம்பதியரின் அன்பு மகனும் சுகனியாவின் அருமைக் கணவரும் அமரர் பேரின்பநாதன் தம்பதியரின் அன்பு மருமகனும் சூசன் மேரிறாணி, அமரர் ஆனந்தறாணி, யூலியன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிறிஸ்ரோப்பர், பத்மாகரன், விங்கா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகந்தறோகன், சுகந்தநேசன், சுகந்தநாதன், செல்வினி, டினேஷ் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மேரிறாணி கிறிஸ்ரோப்பர் (சகோதரி).

33/21, அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்.

(82062)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 26 10 1968

உதிர்வு 25 12 2008



### செல்வி நாராயணபிள்ளை ரதிகலா

எம் குடும்பச் சூரியனே!
அன்பின் பிறப்பை அதன் பெருக்கை
எமக்குக் காட்டியவளே!
வாழ்க்கையின் இருள் கனத்த நாள்களில்
தீப்பந்தமாய் நின்றவளே!
கடைசி மூச்சுவரை பிறருக்காய் வாழ்ந்தவளே!
எம் மனிதக் கடவுளே சின்னாவே!
சொர்க்கத்தில் இருந்து எம்மை
வழி நடத்துவாயா?
எம் குடும்பத்துடன் என்றும் கலக்கும்
உன் நினைவுகளுடன்.....

உன் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 25.12.2008 வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் நாராயணபிள்ளை ரதிகலா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள், சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (23.01.2009) வெள்ளிக்கிழமை இரவு அன்னாரது வீட்டில் நடைபெற்று நாளை (24.01.2009) சனிக்கிழமை காலை சூரிய உதயத்தில் செல்வச் சந்நிதியான் சமுத்திரத்தில் கலக்கப்படும். அத்தருணம் வருகை தந்து கிரியைகளில் பங்கு கொண்டு நண்பகல் மதியபோசன நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பி ரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வ.நாராயணபிள்ளை,
உடுப்பிட்டி வடக்கு, கம்பர்மலை.
021 226 4538

குடும்பத்தினர்.


(80957)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### நவாலியூர் அமரர் கந்தையா செல்வராசா

(தொழிலதிபர் - நவாலி)

அப்பாவே!
கடந்து போகும் காலங்களிலும்
கலைந்து போகாத- உங்கள்
நினைவுகளோடு
ஆண்டு ஒன்று மறையினும்
கனவில் மலர்ந்த
கதைகள் பல, கனவாகவே போன
காட்சிகள் பல...பல...
எதை இழக்கக் கூடாதோ
அதை இழந்து.... எல்லாம் இழந்த
சருகுகளாய் அலைகின்றோம்
கள்ளமில்லா வெள்ளைச் சிரிப்பாகப் பொங்கும்
அந்த நாள் நினைவுகளில்
நாம் என்றும் ஒன்றித்
தவித்திருப்போம் அப்பாவே!
எங்கள் நால்வரின் திறமையைப் பாராட்டி
இப்பிள்ளைகளைப் பெற்ற தந்தை என்ற
பெருமையைக் கேட்காமல் போனீர்களே அப்பா!



புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(82061)

குடும்பத்தினர்.

மலர்வு: 20.07.1949 உதிர்வு: 05.02.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம், மாகியப்பிட்டி பிரதேசங்களுக்கு தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படுகின்றன

## ரெலிக்கொம் நிறுவன அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.23

வலி.வடக்குப் பகுதியின் சுன்னாகம் நகர் மற்றும் மாகியப்பட்டி போன்ற பகுதிகளுக்குத் தொலைபேசி இணைப்பு வழங்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி பகுதிக்கு முதற்கட்டமாக 500 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே இணைப்புக்கு விண்ணப்பித்த 300 பேரில் 50 பேருக்குத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக உடுவில், மருதனார்மடம், கட்டுவன் சந்தி போன்ற இடங்களில் புதிய 'கபினற்' வசதிகள் அமைக்கப்பட்டு இந்தத் தொலைபேசி இணைப்புகள் இரண்டாயிரமாக அதிகரிக்கப்படவுள்ளன. இணைப்பு வசதியை விரிவுபடுத்துவதன் மூலம் இந்தப் பகுதி மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-224)

# தீவுப்பகுதிக்கு போதியளவு மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம்,ஜன.23

தீவுப்பகுதிக்கு மண்ணெண்ணெய் போதியளவு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை பவுசர் மூலம் இந்தப் பிரதேசத்திற்கு மண்ணெண்ணெய் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இந்தப் பிரதேசத்தில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்கள் கேட்கும் பட்சத்தில் மண்ணெண்ணெய் அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்தும் மண்ணெண்ணெய் அனுப்பிவைக்கப்படுவதால் தீவுப் பகுதியில் அதற்கான தட்டுப்பாடு அறவே கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம், குடாநாட்டில் அனைத்து எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் பவுசர் மூலம் தொடர்ந்து மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (202-224)

# குடாநாட்டுக்கான தபால் சேவை தடங்கலின்றி நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.குடாநாட்டிற்கான தபால் விநியோகம் தடங்கல் எதுவுமின்றிச் சீராக இடம்பெற்று வருவதாக யாழ்.பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் வெளியூர் தபால்களும் விமானம் மற்றும் கப்பல் மூலமாக குடாநாட்டிற்கு ஒன்றுவிட்ட ஒரு நாளைக்கு எடுத்துவரப்படுகின்றன.

குடாநாட்டில் சேகரிக்கும் தபால்களும் உடனுக்குடன் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

அத்துடன் சகல முத்திரைகளும் எதுவித தட்டுப்பாடுமின்றித் தபாலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (202-224)

# தென்மராட்சிச் சந்தையில் தேங்காய் விலை வீழ்ச்சி

## மரக்கறிகளின் விலைகளும் சரிவு

யாழ்ப்பாணம்,ஜன.23

தென்மராட்சிப் பிரதேச சந்தையில் தேங்காயின் விலை பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

தேங்காய் ஒன்று பத்து ரூபா தொடக்கம் 25 ரூபா வரை விற்கப்படுவதால் உற்பத்தியாளர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

பல்வேறு இடங்களிலிருந்தும் இச்சந்தைக்குத் தேங்காய்கள் பெருமளவில் கொண்டுவரப்படுவதால் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்து வருவதாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பிரதேசத்தில் விளைவிக்கப்பட்ட மரக்கறி வகைகள் பெருமளவில் இச்சந்தைக்கு வருவதால் அவற்றின் விலைகளும் வீழ்ச்சியடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிலோ ஆயிரம் ரூபா வரை விற்கப்பட்ட பச்சை மிளகாய் கிலோ 250 ரூபாவாகவும் 50 ரூபா விற்கப்பட்ட கீரைப்பிடி 8 ரூபா தொடக்கம் 10 ரூபா வரையும் விற்கப்படுகின்றன.

உருளைக்கிழங்கு கிலோ 80 ரூபா வரை விற்கப்படுவதால் கத்தரிக்காய், பயிற்றங்காய், பாவற்காய் போன்ற மரக்கறி வகைகள் நூறு ரூபாவுக்குள் விலை வீழ்ச்சியடைந்துள்ளன.

நிஷா புயல் வெள்ளத்தினால் பயிர்கள் அழிந்த பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளுக்கு அதிக விலையில் உர வகைகள், கிருமிநாசினிகள் போன்றவை கொள்வனவு செய்து பாவனை செய்ததாகவும் அனைவரும் பயிர்களில் இருந்து ஒரே வேளையில் அறுவடை செய்து இச்சந்தைக்குக் கொண்டு வருவதால் விலைகள் வீழ்ச்சியடைந்து வருவதாகவும் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்தனர்.

எனினும் பொருள்களின் விலை வீழ்ச்சி நுகர்வோர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (202-207)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுயதொழில் பயிற்சி வழங்க ஏற்பாடு

## சர்வதேச லயன்ஸ் கழகங்களின் முன்னாள் தலைவர் தகவல்



வடமராட்சி,ஜன.23

வடக்கில் சுனாமித் திட்டத்தின் கீழ் 400 வீடுகளை நாம் அமைத்து வருகின்றோம். இது பயனாளிகளுக்குப் பெரும் உதவியாக அமையும்.

எனினும் இந்த வீடுகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளோர் சொத்துக்கள் அனைத்தையும் சுனாமியால் இழந்துள்ளனர். வருமானம் இன்றி வாழ்கின்றனர். எனவே அவர்களுக்கு வீடுகளை மட்டும் வழங்குவதோடு நின்றுவிடாது சுயதொழில் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளது. இதற்கு அனைத்து லயன்ஸ் கழக அங்கத்தவர்களும் உதவவேண்டும்.

இவ்வாறு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் முன்னாள் தலைவரும் கொமர்ஷல் வங்கியின் தலைவருமான மகேந்திர அமரசூரியா தெரிவித்தார்.

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகளைக் கையளித்த பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளரும் லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளருமான என்.ரவீந்திரா தலைமையில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மகேந்திர அமரசூரியா மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:

பலாலி விமான நிலையத்தில் இறங்கிய நேரம் முதல் இன்று முழுவதும் உணர்ச்சிமயமான நிகழ்வுகளில் கலந்துகொண்டேன். சுனாமி வீட்டுத்திட்டம் நிறைவேறியதைக் கண்டு பெரிதும் வியப்படைகிறேன்.

இந்த சுனாமி அனர்த்தத்தினால் லட்சக்காணக்கான வீடுகளையும் 400 பேருக்கு மேற்பட்டோரின் உயிர்களையும் இழந்தோம். இந்த அனர்த்தத்தின்போது ஒரு வெளிச்சத்தை நாம் கண்டோம். உலகம் முழுவதும் உள்ள ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது. இதனை உலகெங்கும் உள்ள லயன்ஸ் கழகங்களும் அறிந்து, பெரிய அழிவு ஏற்பட்டுள்ளது என்பதை உணர்ந்து அவரச உதவிகளை வழங்கத் தயாராகின. உலகெங்கும் உள்ள லயன்ஸ் கழகங்களிடம் 10ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியத்தை அவசர உதவித் தொகையாக கேட்டிருந்தோம்.

சுனாமி அழிவுகள் தொடர்பாக பிரத்தியேகத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதனைச் சர்வதேச லயன்ஸ் கழகத்திடம் கையளித்து உதவிகள் தருமாறு கேட்டுக்கொண்டோம். உலகம் முழுவதும் உள்ள லயன்ஸ் கழகங்கள் நிதி சேகரித்து 30ஆயிரம் அமெரிக்க டொலரைச் சேர்த்துக்கொண்டன. இதில் இலங்கைக்கு 7.5 மில்லியன் டொலர் நிதி கிடைத்தது. இந்நிதியைப் பயன்படுத்த லயன்ஸ் கழகம் ஒரு குழுவை அமைத்தது.

### காணிகள் பெறுவதில் சிரமம்

இக்குழு மூலம் நாடு முழுவதும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென வீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. இவ்வீட்டுத் திட்டங்களை உருவாக்க கிழக்கு, தெற்கு மாகாணங்களில் காணிகள் பெறுவதில் தடங்கல்கள், சிரமங்கள் இருந்ததில்லை. ஆனால் யாழ்.மாவட்டத்தில் காணிகள் பெறுவதில் தடங்கல்கள் இருந்தன. எனினும் லயன்ஸ் கழக உறுப்பினர்களின் பெரும் பிரயத்தனத்தினால், முயற்சிகளினால், ஒத்துழைப்பினால் யாழ்.மாவட்டத்தில் சுனாமி அனர்த்த வீடுகளை அமைப்பதற்கான காணிப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது. வீட்டுத்திட்டங்கள் அமைக்கப்பட்டன.

சிறிது தாமதம் ஏற்பட்டாலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 440 வீடுகள் சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் நிறுவப்படவுள்ளன. இவற்றில் 146 வீடுகள் பூர்த்தியடைந்து பயனாளிகளிடம் இன்று கையளிக்கப்பட்டுள்ளன. இவை சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிதிப் பங்களிப்புடன் நிறைவேற்றப்பட்டது. போதிய நிதி இருந்தாலும் யாழ். மாவட்டத்திலுள்ள லயன்ஸ் கழக அங்கத்தவர்களின் ஒத்துழைப்பு பெரிதும் கிடைத்த தாலேயே இதனை நிறைவேற்ற முடிந்தது.

சுனாமி வீட்டுத்திட்டத்தின்கீழ் மேற்கு மாகாணத்தில் மொரட்டுவை, களுத்துறை, ஹக்கடுவ, காலி, கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருக்கோவில், திருகோணமலை, யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறையிலும் லயன்ஸ் கழகத்தினால் வீடுகளைக் கட்டிக் கொடுக்கமுடிந்தது.

யாழ்.மாவட்டத்தில் வீடமைக்கும் வேலைத் திட்டங்களை நிறைவேற்ற லயன்ஸ் சிவானந்தன் தலைமையிலான குழு பெரும் முயற்சிகளை எடுத்திருந்தது - என்றார். (202-70-236-253)

# உலக சாரணர் தின நிகழ்வும் ஸ்தாபகர் நினைவு நிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஜன.23

இலங்கைச் சாரணர் சங்கம், கிளிநொச்சி மாவட்ட தென்மராட்சிக் கிளையினரால் சாரணர் இயக்க ஸ்தாபகர் பேடன் பவல் தினமும் உலக சாரணர் தினமும் எதிர்வரும் 14ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வுகளையொட்டி குருளைச் சாரணர்கள், சாரணர்கள் ஆகியோரிடையே போட்டிகள் அன்றைய தினம் நடத்தப்படும்.

குருளைச் சாரணர் பிரிவு Iக்கு (வயது 7-9 வரை) கும்மிநடனம், பேச்சு, புதிர்ப் போட்டி, கட்டுரை ஆகிய போட்டிகளும் -

குருளைச் சாரணர் பிரிவு IIக்கு (வயது 10-11) கோலாட்டம், பேச்சு, புதிர்ப்போட்டி, கட்டுரை ஆகிய போட்டிகளும் -

சாரணர் பிரிவு Iக்கு (வயது 12-15) நடிப்பு, பேச்சு, புதிர்ப்போட்டி, கட்டுரை ஆகிய போட்டிகளும் -

சாரணர் பிரிவு IIக்கு (வயது 16-18) தாளலயம், பேச்சு, புதிர்ப்போட்டி, கட்டுரை ஆகிய போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் தெரிவு செய்யப்படுவோர் எதிர்வரும் 22ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவர்.

மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் சாரணர்கள், குருளைச் சாரணர்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் கேட்டுள்ளார். (202-207)





# கோப்பாய் தரவை இந்து மயானம் பொதுமக்களின் பாவனைக்கு

கோப்பாய், ஜன.23

கோப்பாய் - கைதடி வீதி மக்களின் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கோப்பாய் தரவையில் உள்ள மயானத்தைப் பயன்படுத்தப் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கோப்பாய் வடக்கு, மத்தி விவசாய சம்மேளனத்தினர் மற்றும் பொதுமக்கள் கோப்பாய் மத்தி கிராம அலுவலகர் தலைமையில் சிரமதானம் மூலம் இறுதி நிகழ்வுகளை நிகழ்த்துவதற்கேற்ப மயானத்தைத் துப்புரவு செய்துள்ளனர். (202-72)





குடத்தனை, வலிக்கண்டியில் நடைபெற்ற நாகர்கோயில் தெற்கு மீள்குடியேற்றத் திட்டத் திறப்பு விழாவிலும் சம்பிரதாயபூர்வமாக வீடுகளைப் பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்விலும் எடுக்கப்பட்ட படங்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷும், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மா.சிறிஸ்கந்தகுமார், பருத்தித்துறைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஐ.சிறிரங்கேஸ்வன் ஆகியோரும் நாகர்கோவில் தெற்கு சனசமூக அபிவிருத்திச் சபைத் தலைவர் வே.சிதம்பரநாதனால் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

இவ்வீட்டுத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கிய ஐ.நா. ஹபிராட் நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் க.பரமேஸ்வரனுக்கு சமூக அபிவிருத்திச் சபைத் தலைவர் வே.சிதம்பரநாதன் நினைவுக் கேடயம் ஒன்றைக் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் கலந்துகொண்ட பயனாளிகளை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: கர்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- " நம்பிக்கை என்பது வாழக்கையின் ஊன்றுகோல் "

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்-1

# EASY WAY TO ENGLISH -1

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

## VERBS

A Word or phrase indicating an action an event or a stage.No sentence can be made without using verb. But with just on verb it is possible to convey this message. Eat, Sleep, Sing, Cry, Walk, Talk, Read, Write are all verbs.

## வினைச்சொற்கள்

ஒரு சொல் அல்லது சொற்றொடர் ஒரு நடவடிக்கையைச் சுட்டி நிற்பதாகும். ஒரு வாக்கியம் வினைச்சொல் இன்றி உருவாக்க முடியாது. ஆனால் ஒரு வினைச்சொல் மூலம் ஒரு விடயத்தை கூறக்கூடிய தன்மை உண்டு. உண், படி, அழு, வேலை, சிரி, கதை, படி, எழுது, என்பன அனைத்தும் விளைச்சொற்களாகும்.

Come, Meaning "You Come" - வா என்பதன் அர்த்தம் " நீ வா"
Go, Meaning "You go" - போ என்பதன் அர்த்தம் " நீ போ"

What are you doing? - நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்.

The above question Can be answered in en word Going - Coming

மேலே உள்ள கேள்விகளுக்குப் பதிலாக அமையும் சொற்கள் போ - வா என்பனவாகும்.

The above single verbs make us understand or know a full message. Since the verb expresses an action or state of being, maturely if follows that the action took place or takes at certain time.

மேலே காணப்படும் ஒரு வினைச்சொல் முழு விடயத்தையும் எங்களுக்கு தெரியப்படுத்துகின்றது. எனவே, வினைச்சொல் தொழிலை விவரித்தல், நடத்தையைத் தெரிவித்தல், இயல்பாக ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நடக்கும் தொழிற்பாட்டை விளக்குதல் போன்றவற்றில் பயன் படுத்தப்படுகிறது.

The action may take place as follows:-
1. The action may be taking place as at present.
2. The action may have already taken place as at present.
3. The action may take place in a future time.
4. The action may be a daily or regular occurrence.
5. The verb changes its from according the action take place or took place or will take place.

செயற்பாடுகளை கீழ்வருமாறு வேறுபடுத்தலாம்.
1. செயற்பாடு குறிப்பிட்ட இடத்தில் நிகழ்காலத்தில் நடப்பது.
2. செயற்பாடு ஏற்கனவே நடைபெற இருப்பது.
3. செயற்பாடு பிற்காலத்தில் நடைபெற இருப்பது.
4. செயற்பாடு நாளாந்தம் அல்லது அடிக்கடி நிகழ்வது.
5. வினைச்சொல்லானது செயற்பாட்டிற்கு நேரத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறுபடக் கூடியது. வினைச்சொல்லின் வடிவங்கள் காலத்திற்கு (நேரத்திற்கு) மாற்றப்படுவதை (Tense) காலங்கள் அழைக்கப்படும்.

## Tenses (காலங்கள்)

They are 12 Groups of Tenses. காலங்களில் 12 வகை உண்டு.

### Present Tense (நிகழ்காலம்)

01. Simple Present Tense - சாதாரண நிகழ்காலம்.
02. Present Continuous Tense - நிகழ்காலத்தொடர்.
03. Present Perfect Tense - நிகழ்கால வினைமுற்று.
04. Present Perfect Continuous Tense - நிகழ்கால வினைமுற்றுத் தொடர்.

### Past Tense (இறந்தகாலம்)

05. Simple Past Tense - சாதாரண இறந்த காலம்.
06. Past Continuous Tense - இறந்தகாலத் தொடர்.
07. Past Perfect Tense - இறந்தகால வினைமுற்று.
08. Past Perfect Continuous Tense - இறந்தகால வினைமுற்றுத் தொடர்.

### Future Tense (எதிர்காலம்)

09. Simple Future Tense - சாதாரண எதிர்காலம்.
10. Future Continuous Tense - எதிர்காலத் தொடர்.
11. Future-Perfect Tense - எதிர்கால வினைமுற்று.
12. Future Perfect Continuous Tense - எதிர்கால வினைமுற்றுத் தொடர்.

### Position of Verbs when used with Pronouns
### வினைச்சொற்களின் நிலைபிரதிப் பெயர்ச்சொற்கள்.

## 1. Simple Present Tense (சாதாரண நிகழ்காலம்)

| Number எண் | First Person தன்மை | Second Person முன்னிலை | Third Person படர்க்கை |
|---|---|---|---|
| Singular ஒருமை | I walk நான் நடக்கிறேன் | You walk நீ நடக்கிறாய் | He walks அவன் நடக்கிறான் |
| Plural பன்மை | We walk நாங்கள் நடக்கிறோம் | You walk நீங்கள் நடக்கிறீர்கள் | They walk அவர்கள் நடக்கிறார்கள் |

Note:-
The verb walk when in third person singular and in the present Has and added "S" (walks)

குறிப்பு:-
வினைச்சொல்லான walks படர்க்கை ஒருமையில் நிகழ்காலத்தில் வரும்போது S எனும் சொல்லை walks என இருக்க வேண்டும். இது எல்லா வினை சொல்லும் படர்க்கை ஒருமையாக வரும்போது இவ்வாறு அமைதல் வேண்டும்.

## 2. Present continuous Tense (நிகழ்காலத் தொடர்)

| Number எண் | First Person தன்மை | Second Person முன்னிலை | Third Person படர்க்கை |
|---|---|---|---|
| Singular ஒருமை | I am walking நான் நடந்து கொண்டிருக்கிறேன் | You are walking நீ நடந்து கொண்டிருக்கிறாய் | He is walking அவன் நடந்து கொண்டிருக்கிறான் |
| Plural பன்மை | We are walking நாங்கள் நடந்த கொண்டிருக்கிறோம் | You are walking நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள் | They are Walking அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள் |

The Present Continuous Tense is used for the following Reasons.
நிகழ்காலத் தொடர்கள் கீழ்வரும் சந்தர்ப்பங்களின்போது பாவிக்கப்படும்.
I am walking now.

1 An activity or an action that is going on.
ஒருசெயற்பாடோ அல்லது செயலோ நடைபெற்றுக்கொண்டு இருப்பதை I am walking now குறிப்பிடுகிறது.

2. An action that is in a state of happening but not at the moment of saying Now a days I am walking in the morning.
ஒரு செயலானது நடைபெற்றுக்கொண்டிருப்பதையும், ஆனால் அது குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறாததையும் குறிப்பிட பயன்படுகிறது.

3. An action to be Perfomed in near future: I am walking to the shopping centre to night.
ஒரு செயற்பாடு மிக அண்மையில் நடக்க இருப்பதைக் குறிப்பிட பயன்படுகிறது.

## 3. Present Perfect Tense (நிகழ்கால வினைமுற்று)

| Number எண் | First Person தன்மை | Second Person முன்னிலை | Third Person படர்க்கை |
|---|---|---|---|
| Singular ஒருமை | I walked நான் நடந்தேன் | You have walked நீ நடந்தாய் | He has walked அவன் நடந்தான் |
| Plural பன்மை | We have walked நாங்கள் நடந்தோம் | You have walked நீங்கள் நடந்தீர்கள் | They have Walked அவர்கள் நடந்தார்கள் |

1. Present Perfect Tense வாக்கியங்களில் I உடனும் We உடனும் have இணைந்துவரும்.
I have, We have
I have finished the work
மாதங்களிலோ சில ஆண்டுகளிலோ செய்து தற்போது முடித்து விட்டிருக்கிறீர்கள் எனும் கருத்தை வெளிப்படுத்துகிறது. finished, walked என்பன இறந்தகால வடிவ சொற்களாகும். இவ்வினைச்சொல்லுடன் have finished, have walked எனும் சொல்லும் நிகழ்காலத்தில் முற்றுப்பெறும் செயலை குறித்து நிற்கின்றது.

2. The Present perfect Tense used to tell about an action that happened just few moment ago.
நிகழ்கால வினைமுற்று வாக்கியம் ஒரு செயற்பாடு ஆனது தற்போதுதான் முடிவடைந்தது என்பதை பாவிக்கப் பயன்படுகிற்து.

3. It is used to express action whose time is unknown.
ஒரு செயற்பாடானது நடைபெற்ற நேரத்தை சரியாக தெரியாவிட்டாலும் குறித்து விளக்கவும் இது பயன்படுகிறது.

4. It is used to mention an action that started earlier and is continuing up to the present moment.
ஒரு செயற்பாடு முன்னதாக தொடங்கினாலும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதை குறிக்கவும் இது பயன்படுகிறது.

## 4. Present Perfect Continuous Tense (நிகழ்கால வினைமுற்றுத்தொடர்)

| Number எண் | First Person தன்மை | Second Person முன்னிலை | Third Person படர்க்கை |
|---|---|---|---|
| Singular ஒருமை | I have been walking நான் நடந்துகொண்டிருக்கிறேன். | You have been walking நீ நடந்துகொண்டிருக்கிறாய் | She has been walking அவள் நடந்துகொண்டிருக்கிறாள். |
| Plural பன்மை | We have been walking நாங்கள் நடந்துகொண்டிருக்கிறோம் | You have walked நீங்கள் நடந்துகொண்டிருக்கிறீர்கள் | They have been walking அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள் |

**Note:**
That the auxiliary 'has' is used for the Third person singular He or She.

குறிப்பு:
உதவி வினைச்சொல்லான Has படர்க்கையில் வரும் ஒருமைச்சொற்களாகிய 'அவன்', 'அவள்' என்பவற்றுக்கு வரும்.

முக்கிய குறிப்பு:
நீங்கள் நடந்துகொண்டிருக்கிறீர்கள் என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்பினால் I have been walking என எழுத வேண்டும். இறந்தகாலத்தில் தொடங்கி நிகழ்காலத்தில் முற்றுப்பெறாமல் இருப்பதனை have been என்பதை வினைச்சொல் இணைத்துக்கொண்டது.
I Present perfect continuous வாக்கியங்களில்,
I, We, You, They ஆகியவற்றில் தொடங்கினால் அவற்றில் வரும் வினைச்சொற்கள் "ing"எனும் சொல்லை ஏற்றுக்கொண்டு அதனுடன் Have been என்பதையும் சேர்த்துக்கொள்ளும்.

தொடர்ச்சி மறுவாரம்....

அன்புடன் ஆங்கில பிரியர்களுக்கு,
இப்பகுதி தொடர்பாக உங்கள் கருத்துக்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பினால் அதற்கேற்றவாறு இப்பகுதி மாற்றங்களுடன் வெளிவரும்.

கல்விச்சுடர் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு :-
ஆசிரியர் உதயன் கல்விச்சுடர்,
362, காஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் : newkalvisudar@yahoo.com.
தொலைபேசி : 021 2228310 / 071 6850005 / 071 4273035
தொலைநகல் : 021 2229944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனிக் கல்வி - நீங்களும் பயிலுங்கள்

இதுவே PJ Corner குழுமத்தின் தாரக மந்திரமாகும். PJ Corner நிறுவனத்தின் மூன்றாம் ஆண்டு பூர்த்தி அடுத்த மாதம் 26 ஆம் திகதி மிக கோலாகலமாக நடைபெற வுள்ளது. PJ Corner குழுமத்தின் ஓர் அங்கமான Brilliant Informative of Information Technology (Biit) எனும் Village Cambus ஆன கணனிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு சில நாள்களில் 3 வருட பூர்த்தியை எய்தவுள்ளது.

### நிர்வாகம்

எமது நிறுவனத்தின் நிர்வாக கட்டமைப்பை எடுத்துக் கொண்டால் PJ Cornerகுழுமத்தின் பொது முகாமையாளராக திரு.V.T.பிரபா அவர்களும் (Australia) பிரதம நிறைவேற்று அதிகாரியாக திரு.S.திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்) அவர்களும் நிறை வேற்று அதிகாரிகளாக திரு.ராம் (B.sc.) திரு. சிவா ஆகியோரும் செயற்படுகின்றனர்.

மேலும் உயர் ஆலோசனைக் குழுவில் கணனி எந்திரி திரு.சதீஸ் (Australia), கணனி எந்திரி ரமணன் (B.Sc. Computer Engineer, Oxford University London, PH.D Cambridge University, London) Dr.ரதீஸ்குமார் (Australia) ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

### வரலாறு


ஆரம்பத்தில் மிக சிறிய எண்ணிக்கையான மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட Biit கணனி பகுதி இன்று 600 இற்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்களை கணனிக் கல்வி அறிவூட்டி வெளியேற்றி உள்ளது. இது கிராமப் புறங்களில் எட்டப்பட்ட சாதனை என்றே கூறவேண்டும். இச் சாதனைகளிற்கெல்லாம் மூலகாரணமாக எமது நிறுவனத்தின் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் அமைந்துள்ளனர். எமது நிறுவனத்தின் 3 ஆண்டு காலப் பகுதியில் 3 விளம்பரங்கள் மட்டுமே அதுவும் **உதயன் நாளிதழில** மட்டுமே பிரசுரிக்கப்பட்டது என்பது ஓர் விசேட அம்சமாகும்.

ஆரம்பத்தில் Internet சேவையையும் கொண்டிருந்த நாம் நாட்டு சூழல் காரணமாக அதனைத் தொடரமுடியாது போனது. இச் சேவையும் மிக விரைவில் மீள ஆரம்பிக் கப்படவுள்ளது.

### பாடப்பரப்பு

எமது நிறுவனத்தில் ஆரம்பத்தில் Ms. Office, Hardware, Internet and E-Mail, I.C.T. போன்ற பாடங்கள் மட்டுமே போதிக் கப்பட்டிருந்தன. பின்னர் மாணவர்களின் ஆர் வத்தையும் அவாவையும் கண்டு வியந்த நாம் இன்று 10 இற்கும் மேற்பட்ட Diploma கற்கை நெறிகளை மாணவர்களிற்கு வழங்கிவரு கின்றோம். அவையாவன.

Diploma In Ms Office
Diploma In Com Accounting
Diploma In Video Editting
Diploma In Multi Media Tec
Diploma In Advance Video Editting
Diploma In Web Disigning
Diploma In Advance Web Disigning




Diploma In Internet and E-Mail
Diploma In Hardware
Diploma In Graphic Disigning
Diploma In Software Engineering
Diploma In Game Making

என்பவையாகும்.

இந்த Diploma கற்கை நெறிகளை விட I.C.T. என்னும் கா.பொ.த. சாதாரண தர மாணவர்களிற்கான பயிற்சியும் GIT எனும் உயர்தர வகுப்பு மாணவர்களிற்கான கல்வியும் போதிக்கப்படுகின்றன. மேலும் மிக விரைவில் H.N.D. பாடநெறிகளும் ஆரம்பிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு அதன் ஓர் அங்கமாக நிறுவனத்தில் நூலகமொன்றும் இயங்க ஆரம்பித்துள்ளது.

### விரிவுரையாளர் குழாம்

மேற்குறிப்பிட்ட பாடநெறிகளில் Diploma in Video Editting, Dip. in Multimedia Tec, Advance Video Editting போன்ற பாடப் பரப்புக்கள் திரு.ஜெயகோபி அவர்களின் தீவிரமான வழிகாட்டலுடன் சிறந்த முறையில் போதிக்கப்பட்டுவருகின்றது. அப்பாடப் பரப்பில் Pinnacle 9.3, 3D Album CS, Cool 3D Studio, BT, Photoshop - CS3, Magic Movi Eddit, Vedio Studio - 1 போன்ற மிகவும் பயன்மிக்க பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இப்பாட நெறிகளானவை Video மற்றும் Audio துறை சம்பந்தப்பட்ட மாணவர்களிற்கும் தொழில்நுட்ப வியலாளர்களுக்கும் மிகவும் பிரயோசனமாக அமைந்துள்ளன.

மேலும் Diploma in Com Accounting எனும் பாடப் பரப்பிற்கு திரு.மதன் அவர்கள் பொறுப்பாக இருந்து மிகவும் துல்லியமான முறையில் எதிர்கால தேவைகளை மிக நுட்பமான வழிமுறையில் மாணவர்கள் கையாளுவதற்கேற்ப அவர்களை வழிநடத்தி வருகிறார். இப்பாடப்பரப்பில் Tally Peach Tree-0.5, Quick Book ,Acc Pack போன்ற Accounting சம்பந்தமான சகல பாடங்களும் அடங்கப் பெற்றுள்ளன. இப்பாடப் பரப்பு e-commerce போன்ற நவீன வாணிபத் துறையை மாணவர்கள் கையாள வழிசமைக்கிறது.

Diploma in web Disigning என்னும் பாடப்பரப்பிற்கு திரு.நிரோஷ் அவர்கள் பொறுப் பாக இருந்து வருகிறார். அவரது வழிகாட்டலில் இப்பாடநெறியானது Html, CSS, Flash - 8, front Page என்பற்றை உள்ளடக்கி வழி நடத்தப் படுகின்றது. இப்பாடப்பரப்பின் மூலம் Internet உலகிற்கு மிக திறமையான மாணவர்களை அனுப்பமுடிகிறது.

Diploma in Game Making and flash போன்ற பாடங்களிற்கு Miss உமா அவர்கள் பொறுப்பாக இருந்து அவற்றின் நவீன தொழில் நுட்பங்களை மாணவர்களிற்கு அறிமுகப் படுத்துவதோடு Animation துறையில் மாண வர்களை உருவாக்கி வருகிறார்.

ஏனைய பாடப்பரப்புகள் யாவும் திரு.ராம் அவர்களின் மேற்பார்வையில் நடைபெறுகிறது.

### பரீட்சைகள்

எமது நிறுவனத்தின் தனித்துவமே எமது பரீட்சைகள் தாம். பரீட்சைகள் யாவும் ஆங்கில மொழியிலேயே நடைபெறுகின்றன. (British Australian Methods) ஒவ்வொரு பாடப்பரப பிற்கும் எழுத்து மூலப் பரீட்சை (30%) செயன் முறை பரீட்சை (70%) ஆகபுள்ளிகள் வழங்கப் படுகின்றன. மேலும் விசேட அம்சமாக Presentation (செயன்முறை விளக்கம்) கட் டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாண வர்களிற்கு கூச்சத் தன்மை அகற்றப்பட்டு தற் துணிவுள்ள மாணவர்களாக வெளிச்செல்கின்றனர்.

மிக விரைவில் பரீட்சை முறைகள் யாவும் Online method ஆக மாற்றப்படவுள்ளன. இதன் மூலம் மாணவர்கள் தமது பெறுபேறுகளை உடனேயே அறிந்து கொள்ள வழியேற்படு கின்றது.

எமது நிறுவனம் கற்றல், கற்பித்தல் சூழலிற்கு அமைவாக மிகவும் பொருத்தமான இடத்திலேயே அமைந்துள்ளது. அழகான பூந்தோட்டம் மற்றும் நவீனமயப்படுத்தப்பட்ட விரிவுரை மண்டபம், நவீன கணனிஆய்வுகூடம் என்பன இங்கு குறிப்பிடத்தக்கவை.

மேலும் வடமராட்சி, சிறுப்பிட்டி, கோப்பாய் போன்ற தூர இடத்து மாணவர்களிற்கு அவர்களிற்கேற்ற விரும்பிய நேர அட்டவணை யுடன் சிறந்த கட்டணச் சலுகைகளையும் கொடுத்து அவர்களது கணனி அறிவை வளர்ப்பதற்கு எமது நிறுவனம் பெரும் பங்காற்றி வருகின்றது.

எமது நிறுவனத்தின் ஆரம்ப கட்ட நேரத்தில் எம்மோடிணைந்து பெரும்பங்காற்றிய திரு. வேணுகோபன் (B.Sc.) திரு.துஸ்யந்தன் (B.Sc.) ஆகிய இருவருக்கும் நாம் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

### சான்றிதழும் பட்டமளிப்பு விழாவும்

எமது நிறுவனத்தின் சான்றிதழானது இலங்கை அரசில் பதிவுசெய்யப்பட்ட ஓர் சான்றிதழ் ஆகும். மேலும் பட்டமளிப்பு விழா வானது ஒவ்வொரு வருடமும் பெப்ரவரிமாதம் 26 ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெறு கின்றது.


## DMI Computer Education

## தொழில்சார் கணனிக் கற்கை நெறிகள்

ஆண்டாண்டு காலமாகக் கல்விச் சமூகத்தின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற DMI நிறுவனத்தினால் மாணவர்களின் நன்மைகருதி தகவல் தொழில் நுட்பத்துறையில் உயர் கணினி கல்வியை வழங்கும் நோக்கில் DMI Computer Education ஸ்தாபிக்கப்பட்டு தரமானதுமானதும் முழுமையானதுமான கணினிக் கல்வியை வழங்கி மாணவர்களின் மனதில் தனித்துவமான நிறுவனமாக திகழ்ந்து வருகின்றது.

DMI Computer Education இன் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கணினி கற்கை நெறிகளானது காலத்தின் தேவைக்கேற்ப மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத்துறையில் சிறந்து விளங்குவதற்கு ஏற்ற வகையில் நவீன தொழில் நுட்பங்களையும், புதிய பாடவிதானங்களையும் முற்றுமுழுதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் கற்கை நெறிகள் யாவும் உள்நாட்டு, சர்வதேச தொழிற் சந்தைக்கு ஏற்பவும் சர்வதேச பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடர இருக்கும் மாணவர்கள் தங்கள் உயர்கல்வியை சிறப்பாக ஆரம்பிப்பதற்கும் உறுதுணையாக அமைகின்றது.

DMI Computer Education ஆனது கல்வி சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்று முன்னணியில் திகழ்வதற்கு

- காலத்தோடு இணைந்த தொழில்சார் கணினி கற்கைநெறிகள்
- சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- நவீன தொழில்நுட்பத்திற்கு ஈடுகொடுக்கக்கூடியவகையில் அமைந்த நவீன வசதிகளுடன் கூடிய கணினி ஆய்வு கூடம்
- வரையறுக்கப்படாத கணினி செய்முறைப் பயிற்சிகள்
- பாடத்தோடு இணைந்த பயன்படுத்தக்கூடியவகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இலவச பாடநூல்கள்
- மறைமுகக்கட்டணம் எதுவுமில்லாத இலகு தவணைக்கட்டண வசதி
- ஒவ்வொரு மாணவரின் கற்கைநெறி தொடர்பில் தனிப்பட்ட கவனம்
- இலவச கல்வி வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள்

என்பன சில காரணங்களாக அமைகின்றன...

### கணக்கீட்டுத்துறையில் கணனி

கணக்கீட்டு மென்பொருள் துறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய DMI Computer Education.

தொழில்துறை நிறுவனங்கள் தமது வர்த்தகத்தின் நாளாந்த நடவடிக்கைகளினை கணினி மயப்படுத்துவதற்கான...

ஆலோசனைகள் மற்றும் அவற்றுக்குத் தேவையான மென்பொருட்களை கணக்கீடு மற்றும் மென்பொருள் வடிவமைப்புத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்களினால் சிறந்த

முறையில் வடிவமைத்துக் கொள்வதற்கும் சிறந்த மென்பொருள் பராமரிப்பு சேவையை வழங்கி வருகின்றது...

அத்துடன்

வெளிநாடு, வங்கிகள் (Banks), தனியார் நிறுவனங்கள் (Companes), அரசசார்பற்ற நிறுவனங்களில் (N G O) வேலை வாய்ப்புக்களை எதிர்பார்ப்போர், மற்றும் கணக்கியல் துறையில் மாணவர்கள் அனைவரும் பயனடையும் விதமாக உலகின் முன்னணிக் கணக்கீட்டு மென்பொருட்களான (Tally, Quick Book, Acc pack, MYOB, Peach Tree) போன்றவற்றின் மூலம் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், புதிய கம்பனிச் சட்டங்களுக்கு அமைவாகவும், நவீன கணக்கீட்டு நுட்பங்களுடனும் முற்று முழுதான 100% செய்முறை பயிற்சிகளுடன் கூடிய கணக்கீட்டு மென்பொருள் கற்கைநெறிகள் சிறப்பாக நடைபெறுகின்றது...

DMI Computer Education இன் புதிய கல்வியாண்டுக்கான புதிய பிரிவுகளுடன் 25/01/2009, 26/01/2009, 28/01/2009, 02/02/2009 ஆம் திகதிகளில் இணைந்து பயன் பெற்றுக்கொள்ளுங்கள்

## DMI COMPUTER EDUCATION வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் கணினி டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கைநெறிகள்.

Diploma in Microsoft Office
Diploma in PC Application
Diploma in Computerized Accounting
Dip. in Video Production & Multimedia
Dip.in Web Designing & Development
Dip. in Pre-Press Desktop Publishing



IT Applications,Hardware,Programming,Multimedia,&.net Technology.
குறைந்த கட்டணத்தில் முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி

கணினித்துறையில் அனைவரும் பயனடையும் விதமாக...



விசேட சிறப்பு சலுகை
100% செய்முறைப்பயிற்சி
தமிழ் மொழி விளக்கங்களிலான முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய
DIPLOMA IN HARDWARE ENGINEERING
Microprocessor, Various Mother Board Handing,All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Repairing Installation of- O/S & Software, Assembling, upgrading, Configuring, Troubleshooting, , User Level Networking

A/L, பல்கலைக்கழக, HNDA, HNDM, aat மாணவர்கள் மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்களுக்கான கணக்கீட்டு மென்பொருள் கற்கைநெறி
Tally #Quick Books # Accpack # MYOB
100% செய்முறைப்பயிற்சிகளுடன்
JOIN WITH LEADERS IN ACCOUNTS

DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION 100%
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (Near The Science Hall)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2008ஆம் ஆண்டின் சிறந்த வங்கியாக ஏழாவது தடவையாகவும் கொமர்ஷல் வங்கி

இந்நாட்டின் முன்னணி தனியார்துறை வங்கியான கொமர்ஷல் வங்கி மீண்டும் ஒருமுறை இலங்கையின் "2008 ஆண்டுக்கான சிறந்த வங்கி" என சர்வதேச வங்கியியல் சமூகத்திற்கு சேவைபுரியும் பிரசித்திபெற்ற, "த பாங்கர்" சஞ்சிகையினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச வங்கியியல் துறையில் "ஒஸ்கா" விருதாகக் கருதப்படும் இந்த விருதை கொமர்ஷல் வங்கி, மேற்படி சஞ்சிகையினால் நடத்தப்பட்ட ஒன்பது விருது வழங்கல் நிகழ்வுகளில் ஏழு தடவைகள் இத்துடன் வென்றுள்ளது.

வங்கிகளினால் பதில்கள் வழங்கப்படும் விரிவான வினாக் கொத்துகளின் அடிப்படையில் ஆண்டுக்கான சிறந்த வங்கி விருதுக்குரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆண்டு 150 நாடுகளிலிருந்து 740 வங்கிகள் வினாக்கொத்துகளுக்கான பதில்களை "த பாங்கர்" சஞ்சிகையின் ஆசிரிய குழுவுக்குச் சமர்ப்பித்திருந்தன. இச்சஞ்சிகை 2008ஆம் ஆண்டுக்கென உலகளாவிய வெற்றியாளர்களுக்கு 160 'பிரக்கன்' விருதுகளை வழங்கியது.

"ஒரு குழப்பகரமான சூழலில் கொமர்'ல் வங்கி மிகச் சிறந்த நடைமுறை மற்றும் ஸ்திரத்துக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குவதை இந்த விருது தகுந்த வேளையில் மீண்டும் உறுதி செய்துள்ளது" என்று கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. அமித குணரத்ன குறிப்பிட்டார்.

"சில நிதி நிறுவனங்களில் பொதுமக்களின் நம்பிக்கை தளர்ச்சியடைந்துள்ளது. ஆயினும் கொமர்ஷல் வங்கியின் உறுதியானது மீண்டும் மீண்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. வெளியிடும் கருத்துகளுக்கு மிகுந்த பெறுமதியைப் பெறும் ஒரு சுயாதீனமான சர்வதேச சஞ்சிகையின் இந்த நியமனம், வங்கிக்குக் கிடைத்த விருதுகளில் மிகச் சமீபமானதாகும்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஆண்டின் சிறந்த வங்கி விருதானது, மிக அண்மைய பெறுபேறுகள், வளர்ச்சி வீதங்கள் மற்றும் செயற்பாட்டு தரவுகளை வினாக் கொத்துக்குரிய காலத்திற்கு பிரதிபலிப்பது மட்டுமல்லாமல் தொழில்நுட்பம், சுவீகரிப்புகள் மற்றும் தந்திரோபாய அபிவிருத்திகள் உள்ளிட்ட பெறக்கூடிய அனைத்து விடயங்களின் ஓர் ஆய்வாகவும் அமைகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் மிகச்சிறந்த வங்கிக்கான விருதானது, செயற்பாட்டு பிரமாணம், தரம்வாய்ந்த சாதனைகள் மற்றும் கேந்திரமான முன்னோடி முயற்சிகள் ஆகியவற்றை இணைத்த மிகச் சிறந்த பல்வகை செயற்பாட்டுக்குரியதாகும்.

இவ்வாண்டின் 'பிரக்கன்' விருதுகளில் BNP பரிபாஸ் 2008 ஆண்டுக்கான உலக வங்கி விருதை வென்றது. பிராந்திய விருது வெற்றியாளர்களாக, ஆசியாவுக்கு ICBC, மேற்கு ஐரோப்பாவுக்கு BNP பரிபாஸ், மத்திய கிழக்கு ஐரோப்பாவுக்கு ரைபேய்சன்

விளம்பர விவரணம்

இன்டர்நஷனல், லத்தீன் அமெரிக்காவுக்கு பாங்கோ சன்ராண்டர், மத்திய கிழக்கிற்கு குவைத்த நஷனல் வங்கி, ஆபிரிக்காவுக்கு ஸ்ரான்டர்ட் வங்கி ஆகியவை விளங்கின.

நாட்டு விருது வெற்றியாளர்களில் கொமர்ஷல் வங்கியுடன், இந்திய ஸ்டேட் வங்கி, ICBC (சீனா), HSBC (கொங்கோங்), HSBC குழு மம் (ஐக்கிய இராச்சியம்), JP மோர்கன் (அமெரிக்கா), DBS வங்கி (சிங்கப்பூர்), டீசே பரிபாஸ் (பிரான்ஸ்), கொமர்ஸ்பாங் (ஜேர்மனி), பாகிஸ்தான் நஷனல் வங்கி மற்றும் பப்ளிக் வங்கி (மலேசியா) ஆகியவை இடம்பெற்றன.

1969இல் நிறுவப்பட்ட கொமர்ஷல் வங்கி, நுகர்வோர் வங்கியியல், திறைசேரி மற்றும் பிணைகள் சந்தைகளில் செல்வாக்கு மிக்க நிலைகளுடன் இலங்கையின் முன்னணி வங்கியாகத் திகழ்கின்றது. இவ்வங்கி 170 கணனி இணைப்பிலான கிளைகள், சுப்பர் மார்கெட் வங்கியியல் கருமபீடங்கள் சேவை நிலையங்கள், மற்றும் 335 ATM களை கொண்ட வலையமைப்பினை இலங்கையில் சொந்தமாக வைத்துள்ளது. அண்மையில், உலகின் உச்சநிலையான 1000 வங்கிகளில் நிதியியல் ஸ்திரத்தன்மையில் உலகில் 155 ஆவது இடத்திலுள்ள வங்கியாகவும் "த பாங்கர்" சஞ்சிகையினால் தரச் சிறப்பு வழங்கப்பட்டது. அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட "குளோபல் பினான்ஸ்" சஞ்சிகையினால் இலங்கையில் "மிகச் சிறந்த வங்கி" யென தொடர்ந்து பத்து ஆண்டுகளாகத் தர நிர்ணயம் செய்யப்பட்டது. மற்றொரு பிரசித்திபெற்ற சர்வதேச நிதிச் சஞ்சிகையான "யூரோமணி" 2007 ஜூலையில் இலங்கையில் "மிகச் சிறந்த வங்கி" என தரச் சான்றிதழ் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆலயங்கள் அறநெறிச்சாலைகளாகட்டும்

ஞானக்கதிர்

''மாலறநேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே''

என்பது சிவஞானபோதம் 'திருக்கோயில் இல்லாத திருவிலூர் என்பது நாவுக்கரசரின் நற்திருவாக்கு - இறைவன் மகிழ்ந்து வதியுமிடம் கோயில் - இறைமகிழ் இல் கோயில்.

ஆகவே நாட்டிலே வாழுகின்ற மனித சமுதாயத்தின் இறைவழிபாட்டிற்காகவும் ஆத்மீக உரிமைக்காகவும் நமது கலை, கலாசாரங்களை பிரதிபலிக்கும் விழுமியங்களாகவும் அவை விளங்குகின்றன. மேலும்,


''மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது
செய்வித்தல்
கண்ணினால் நல்விழாப் பொலிவு கண்டார்தல்''

ஆலயங்கள், விழாக்கள் - உற்சவங்கள் நடைபெறும் ஸ்தாபனங்களாக மட்டுமன்றி அறநெறிபோதிக்கும் அரண்களாக விளங்குவதும் முக்கியமானது. தனக்குவமையின்றி விளங்கும் இறைவன் மனக்கவலை மாற்றவல்லவன். அங்கே பிரார்த்தனைகள், வழிபாடுகள் பரந்த மனிதநேய அடிப்படையில் நடைபெறவேண்டும். இன்று நாம் வாழுகின்ற் நெருக்கடியான காலச்சூழலில் எல்லோரும் இன்புற்றுவாழ ஆலயங்களில் பஜனை, வழிபாடுகள், கூட்டுவழிபாடு, அன்னதானங்கள் நடைபெறவேண்டும்.

அங்கு நடைபெறுகின்ற பூஜைகளின் நிறைவிலே உலகம் யாவும் நலத்துடன், மங்களத்துடன் வாழவேண்டுமென இறைவனை வேண்டுதல் செய்வதைக் காணலாம்.

எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும், நல்வாழ்வு வாழவேண்டும் என்ற சிந்தனை யாவரது நெஞ்சிலும் பிரதிபலித்தல் அவசியம்.

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்
கோப்பாய்.



வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் மாணிக்கவாசக சுவாமிகள் வெளிவீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.

# IIS City Campus இன் தனித்துவம் மிக்க உயர்கல்விச்செயற்பாடுகள்




IIS City Campus is a predominant, decisive and deriving unit in the IIS Group, which was established in the year 1996. It was an ambitious venture launched with a vision to produce a new generation of qualified professionals, to meet the immedi e and increasing demand by the industry. IIS City Campus is a dynamic, modern campus offering high quality programmes and excellent and meritable value added super services. Situated at the heart of the city of Jaffna, in Sri Lanka. IIS City Campus laboratories are all equipped with latest industry standard workstations and the latest software as well as high speed access to internet. IIS City Campus also has its own library, well stocked with books and e-media available for short term loan and reference. IIS City Campus lecturers and tutors are highly qualified and experienced. High quality lecture notes and hand outs are provided for all courses. By looking at our accreditations one can be confident that they are joining a quality centre, with courses leading to recognized overseas qualifications. The range of courses offered at IIS City Campus is growing all the time.

HND பயிலும் மாணவர்களின் உள்ளத்திலிருந்து...............



**சிவசங்கரி சிவானந்தமூர்த்தி**
**புத்தூர்.**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவு மாணவியாகிய நான் 2005 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த நிலையில் என் எதிர்காலக் கனவுகளுக்குக கைகொடுத்து உதவியது IIS City Campus நிறுவனத்தின் ர்னே கற்கைநெறி. பெற்றோர்களின் வழிகாட்டலும் இந்நிறுவனத்தின் நம்பகத்தன்மையும் என்னை இந்நிறுவனத்தில ர்னே பத்தாவது பிரிவில் இணைந்து பயிலவைத்தது. இதற்கு முன்னைய ஒன்பது பிரிவு மாணவர்களும் உயர்ந்த நிலையில் இருப்பது என் கல்விக்கு ஊக்கமளிக்கின்றது. IIS நிறுவனம் கடந்த 13 வருட கால சேவையை யாழ் குடாநாட்டு மாணவர்களுக்கு சிறப்பாக வழங்கியிருக்கின்றது. தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. சர்வதேச அங்கீகாரம் வாய்ந்த உயர்கல்வியை எமது மாணவர்கள் தமது சொந்தப் பிரதேசத்திலேயே தொடர்வதற்கு IIS இன் இச்சேவை எமக்குக் கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். வடக்கில் நுனநஒஉநட நிறுவனத்தின் தரப்படுத்தலில் தொடர்ச்சியாக அதியுயர் தரமாகிய 'A' தரத்தினைப் தொடர்ச்சியாகப் பெற்று சாதனை படைத்துவரும் IIS City Campus நிறுவனத்தில் நாம் பயின்று கொண்டிருக்கின்றோம் என்று கூறிக்கொள்வதில் மிகவும் பெருமையடைகின்றேன்.



**ரு. ருத்ரநாத்**
**யாழ்ப்பாணம்.**

யாழ். இந்துக்கல்லூரியில் 2007 ஆம் ஆண்டு கணிதப்பிரிவில் க.பொ.த உயர்தரப் பரீட்சையை முடித்துக்கொண்ட எனக்கு பொறியியல் துறையில் அல்லது குறைந்த பட்சம் கணிய அளவையியல் (Quantity Surveying) துறையில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு மிகுந்த விருப்பம் இருந்தது. கணிய அளவையியல் துறையானது மிகவும் சிறந்த துறையாக விளங்குவதோடு மட்டுமல்லாது இலங்கையிலும் வெளிநாட்டிலும் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் கூடிய சிறந்த வேலை வாய்ப்பினையும் இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளதை அறிந்தேன். கொழும்பு சென்று உயர்கல்வியைத் தொடர இருந்தவேளையில் IIS City Campus இல் QS கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளதை பத்திரிகை மூலம் அறிந்தேன். முதலாவது பிரிவிலேயே இணைந்து கொண்ட பெருமையுடன் பயின்று வருகின்றேன்.இப் பயிற்சி முடிவில் வெளிநாடு சென்று இறுதியாண்டுக் கல்வியையும் தொடரவுள்ளேன. மிகவும் சிறந்த முறையிலே இக்கற்கைநெறிக்குரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதால் எனது எதிர்காலம் தொடர்பாக மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் .



**ஸ்.பிறேம்நாத்**
**யாழ்ப்பாணம்.**

யாழ் புனிதபத்திரிசியார் கல்லூரி மாணவனாகிய நான் 2007ம் ஆண்டு வர்த்தகப்பிரிவில் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றியிருந்தேன்.பரீட்சை முடிவுகள் என் பல்கலைக்கழக கனவுகளை கலைத்து விட்டது. இந்த நிலையில் உயர்கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்த எனக்கு IIS City Campus நிறுவனத்தின் HND கற்கை நெறி உயர்நிலைக்கு கொண்டு செல்லும் என எனது பெற்றோரும் உறவினர்களும் நம்பிக்கையூட்டினார்கள். அதற்கமைய IIS City Campus இல் HND in Software Engineering 10வது பிரிவிலே இணைந்து தற்போது கற்கை நெறியினை பயின்று கொண்டிருக்கின்றேன். இக்கற்கை நெறிக்கு ஆங்கில அறிவு தேவை என்பதனால் இக்கற்கை நெறியுடன் தொடர்ச்சியாக ஆங்கிலமும் கற்பிக்கப்படுகின்றது. இதனால் இக்கற்கை நெறியினை இலகுவாக கற்க முடிகின்றது. அத்துடன் IIS City Campus நிறுவனம் உயர்கல்வி நிறுவனத்திற்கு இருக்க வேண்டிய சகல வளங்களும் பண்புகளும் நிறைந்த நிறுவனமாகவும் விளங்குகின்றது. இக்கற்கை நெறியை எனது சிரேஸ்ர மாணவர்கள் பலர் பயின்று வெளிநாடுகளில் உயர்கல்வியை தொடர்வதை அறிந்த எனக்கு எனது உயர்கல்விஇ எதிர்காலம் தொடர்பாக முழுமையான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து பெப். 12இல் வைகோ உண்ணாவிரதம்!

## டில்லி நாடாளுமன்று அருகே நடத்த ஏற்பாடு

ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து பெப்ரவரி 12 ஆம் திகதி இந்திய நாடாளு மன்றம் கூடும் நாளில் டில்லியில் நாடாளு மன்றத்துக்கு அருகே ம.தி.மு.க. சார்பில் என் தலைமையில் உண்ணாநிலை அறப் போர் நடைபெறும்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செய லாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

முல்லைத்தீவில் 6 லட்சம் ஈழத் தமிழர்கள், சிங்கள இராணுவத்தின் கோரத் தாக்குதலால் மரணத்தின் பிடியில் சிக்கி உள்ளனர். இடை விடாத பீரங்கித் தாக்குதல் வேறு. இரவு பக லாக விமானக் குண்டு வீச்சு, அதிலும் உலக நாடுகள் தடை செய்துள்ள கொத்துக் குண்டு களை வீசுகிறது.

நேற்றுமுன்தினம் மட்டும் 37 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றுள்ளனர். ஜனவரி 7ஆம் திகதி காஸாப் பகுதியில் ஒரு கட்டடத் தின் மேல் இஸ்ரேல் குண்டு வீசியதில் 45 பேர் கொல்லப்பட்டபோது, உலக நாடுகள் அதற்கு எதிர்ப்பாக கடும் கண்டனத்தை தெரிவித்தன.



ஆனால் 6 கோடித் தமிழ் மக்களாகிய நாம், 20 கி.மீ. தொலைவில் கடலுக்கு அப்பால் படுகொலைக்குள்ளாகும் ஈழத் தமிழர்களைக் காக்கக் கதியற்றுப் போனோம்.

தற்போது நடைபெறும் தமிழ் இன அழிப்பு யுத்தத்தை, இந்தியாவின் மத்திய அரசு, கொடிய நோக்கத்தோடு திட்டமிட்டு ஊக்குவித்து உத வுகின்ற மன்னிக்க முடியாத துரோகத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

உலகெங்கும் உள்ள தமிழர்களின் உள்ளங் கள் பதறுகின்றன. அங்கமெல்லாம் நடுங்குகிறது. மஹிந்த ராஜபக்ஷ அரசு மூர்க்கத்தனமான இனக் கொலையில் ஈடுபட்டுள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசு செய்யும் துரோகத்தைக் கண்டித்தும், இராணுவ உதவிக ளைத் தடுப்பதற்கும், ஈழத் தமிழர்களுக்கு ஏற் பட்டுள்ள கொடுந்துயரத்தைப் போக்க அனைத்து மட்டங்களிலும் ஆதரவைத் திரட்டவும் பெப்ரவரி 12ஆம் திகதி டில்லியில் ம.தி.மு.க. சார்பில் என் தலைமையில் உண்ணாநிலை அறப்போர் நடைபெறும் என்றுள்ளது.



கடந்த புதன்கிழமை தொடங்கிய சட்டப் பேரவைக் கூட்டத்துக்கு பா.ம.கவினர் அனை வரும் கறுப்புச் சட்டை அணிந்து வந்த போது...

# இலங்கைச் சிங்கள அரசைக் கண்டித்து சட்டமன்றில் பா.ம.கவினர் கறுப்புச்சட்டை

## போராட்டம் தொடரும் என பா.ம.க. தலைவர் அறிவிப்பு

சென்னை, ஜன. 23

''சட்டப்பேரவையின் நடப்புக் கூட்டத் தொடர் முழுவதும் எமது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் கறுப்புச் சட்டை அணிந்து வருவோம்'' - என்று பா.ம.க. தலை வர் கோ.க. மணி கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை தொடங்கிய சட்டப் பேரவைக் கூட்டத்துக்கு பா.ம.கவினர் அனை வரும் கறுப்புச் சட்டை அணிந்து வந்தனர்.

பின்னர் இதுகுறித்து செய்தியாளர்களிடம் கூறியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கோ.க.மணி கூறியவை வருமாறு-

இலங்கையில் தமிழினத்தை அழித்தொழிக்க வேண்டும் என்ற நோக்கில் அந்த நாட்டு இரா ணுவம் செயற்படுகிறது. குழந்தைகள், பெண்கள் உட்பட அனைவரையும் குண்டுவீசி அழிக்கின் றனர். மருந்து, உணவு ஆகியவற்றுக்கு தடை விதித்து ஈழத் தமிழர்களை கொல்கிறார்கள்.

இனவெறி பிடித்த சிங்கள அரசைக் கண் டித்து கறுப்புச் சட்டை அணிந்துள்ளோம். பேர வைக் கூட்டத் தொடர் முழுவதும் கறுப்புச் சட்டை அணிந்து வருவோம் - என்றார்.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசுக்கு உச்சக்கட்ட நெருக்குதல் அளித்துள்ளது இந்தியா

## காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவிப்பு



டில்லி, ஜன. 23

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இராஜாங்க அடிப்படையில், ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் விவகாரத்தில் எந்த அளவுக்கு நெருக்கடி கொடுக்க முடியுமோ, அந்தளவுக்கு இலங்கை அரசை இந்தியா நிர்ப் பந்தித்துள்ளது. இந்த விடயத்தில் மத்திய அரசு மெத்தனமாகச் செயற்படுகிறது ஏற்க முடியாது.

- இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செய்திச் தொடர்பாளர் ஜெயந்தி நடரா ஜன் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்க ளுக்குப் பேட்டி அளித்தபோதே அவர் இதைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு தன்னால் இயன்ற அளவுக்கு நடவடிக்கை எடுத்துவிட்டது. இராஜாங்க அடிப்படையில், ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் விவகாரத்தில் எந்த அளவுக்கு நெருக்கடி கொடுக்க முடியுமோ, அந்தளவுக்கு இலங்கை அரசை இந்தியா நிர்ப் பந்தித்துள்ளது.

இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, இந்திய வெளியுறவு கொள் கையின் உச்சக்கட்ட வரம்பை மீறி இந்த விட யத்தில் இந்தியா செயற்பட்டுள்ளது. இந்த நிலையில், மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும், பிரதமர் மன்மோகன்சிங்கும் ஈழத் தமிழர் பிரச்சினையில் மெத்தனமாக செயற் படுவதாகச் சிலர் கூறுவதை ஏற்க முடியாது. அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது - என்றார்.

# பிரணாப்பை இலங்கைக்கு அனுப்புமாறு மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்துவேன்

## மத்திய அமைச்சர் நாராயணசாமி உறுதி

திண்டிவனம், ஜன.23

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர் ஜியை இலங்கைக்கு அனுப்ப வேண்டும், அவர் களது துயரங்களைப் போக்க வேண்டும் என்ற ராமதாஸின் வேதனையையும் கோரிக்கைகளை யும் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவிப் பேன் - என்று ராமதாஸைச் சந்தித்த புதுவை எம்.பியும் மத்திய அமைச்சருமான வி.நாரா யணசாமி உறுதி தெரிவித்தார்.

திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் கடந்த புதன்கிழமை பா.ம.க. நிறுவுநர் ராமதா ஸும், மத்திய அமைச்சர் வி.நாராயணசாமியும் திடீரெனச் சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இந்தச் சந்திப்பு மரியாதை நிமித்தமான சந் திப்பு. இரு நாள்களுக்கு முன் நான் பிரதமரைச் சந்தித்தபோது ஈழத் தமிழர்கள் பிரச்சினை குறித் துப் பேசினேன்.

வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி, போர் நிறுத் தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் கருணாநிதியும், ராம தாஸும் ஏற்கனவே பிரதமரிடம் வலியுறுத்தி யுள்ளனர். அங்கு நடைபெறும் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து ஈழ மக்கள் அமைதியாக வாழ வழிவகை காணவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

ராமதாஸைச் சந்தித்தபோது, ஈழத் தமிழர்க ளின் நிலை குறித்து மிக உருக்கமாகக் கூறினார்.

பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கும் போது ராமதாஸின் வேதனைகளை அவரது கவனத்துக்குக் கொண்டு செல்வேன். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்த பட்ச செயல் திட்டங்களில் ஒன்றான ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வலியுறுத்தப்படும் - என்றார்.

இச்சந்திப்புக் குறித்து ராமதாஸ் கூறுகையில் -

''ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அமைச்சர் நாராயணசாமி மிகுந்த ஆர்வமாக உள்ளார். இவரது ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்ப பிரதமரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்வார் என நம்புகிறேன் - என்றார்.

# போர் நிறுத்தம் கோரி மாணவர்கள் நடத்தும் போராட்டதைப் பொலிஸார் தடுக்கக் கூடாது!

## பா.ம.க. - கம்யூனிஸ்ட் வலியுறுத்து

''இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற் படுத்த வலியுறுத்தி தமிழகத்தில் மாணவர்கள் நடத்தும் போராட்டத்துக்குப் பொலிஸார் எந்த வித இடையூறும் செய்யக் கூடாது'' - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் ராமதாஸ், கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் தா.பாண்டியன் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து ராமதாஸ் வெளியிட்ட அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கைத் தமிழர்களை அடியோடு அழிக்க வேண்டும் என்று இனவெறிச் சிங்கள அரசு, கொடூரத்தின் உச்சிக்குச் சென்று முப்படை களையும் கொண்டு பச்சிளங் குழந்தைகள், பெண்கள் அனைவரையும் படுகொலை செய்து விட்டு, வீடுகள், மசூதிகள், கோவில்கள், தேவா லயங்கள் அனைத்தையும் தரைமட்டம் ஆக்கி வருகிறது. இந்தக் கொடூரச் செயலைத் தடுத்து நிறுத்தும் வண்ணமாக இலங்கையில் உடனடி யாக போர் நிறுத்தம் வேண்டும்.

அங்கு அமைதிப் பேச்சு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி தமிழகத்தில் அரசியல் கட்சி கள், திரைப்படத் துறையினர், வணிக அமைப் புகள், மாணவர் சங்கங்கள் உள்ளிட்டோர் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

மாணவர்களும் தங்களுக்கு உள்ள உணர்வை வெளிப்படுத்த அறவழியில் அமைதி வழியில் வகுப்புகளைப் புறக்கணிக்கின்றனர். இதில் யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் அமைதி முறையில் போராட்டம் நடத்துகின்றனர். மாணவர்கள் போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது.

அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மாணவ - மாணவிகள் அறவழியில் 22, 23ஆம் திகதி களில் (நேற்றும் இன்றும்) வகுப்புகளை புறக் கணித்துப் போராட்டம் நடத்துகிறோம் என மாணவர் சங்கங்கள் அறிவித்து உள்ளன. இந்த மாணவர் போராட்டத்திற்கு ஒட்டுமொத்த தமிழ் மக்கள் ஆதரவு உண்டு. அமைதி வழியில், அற வழியில் வகுப்புகளைப் புறக்கணித்து அவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு பொலிஸார் எந்தவித இடையூறும் செய்யாமல் பாதுகாப்பு வழங்க வேண்டும் - என்றுள்ளது.

தா.பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கை முல்லைத்தீவில் மரணத்தின் விளிம்பில் இருக்கும் 6 லட்சம் தமிழ் மக்களின் உயிர் காக்கும் போராட்டத்தை, வகுப்புகளைப்



புறக்கணிப்பதன் மூலம் மாணவர்கள் தொடங்கி இருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது.

இந்தப் போராட்டத்தில் மாணவர்களுக்கு பொலிஸார் எந்தவித அச்சுறுத்தலையும் செய் யக் கூடாது. போராடும் மாணவர்கள், பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்காமல் அமைதியான முறையில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது.

# இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஜெயலலிதா குரல் கொடுக்க வேண்டும்

## திருநாவுக்கரசர் எம்.பி. பேட்டி

இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களுக்கு ஆதரவாக ஜெயலலிதா குரல் கொடுக்க வேண் டும். இலங்கையில் சாவின் விளிம்பில் தவித்துக் கொண்டிருக்கும் அப்பாவித் தமிழர்களுக்கு இந்தத் தருணத்தில் மத்திய அரசு உதவி செய்யாமல், பின்னர் உதவி செய்வதால் எந்தவித பயனும் இல்லை - என்று பாரதீய ஜன தாக் கட்சியின் தேசிய செயலாளர் திருநாவுக்கரசர் எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியா ளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இத னைத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியும், தமிழக அனைத்துக்கட்சி குழு டில்லி சென்று வலியுறுத்தியும் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசு இலங்கையில் தமிழர்களை கொல்ல உதவி செய்து வருகிறது.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாட்டிலுள்ள கட்சிகளின் கூட்டணிகளுக் கிடையே முரண்பாடு காணப்படுகிறது. ஜெய லலிதா இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க வேண்டும்.

பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியில் வாஜ் பாய் பிரதமராக இருந்தபோது இலங்கையில் தமிழ்மக்கள் பாதுகாப்புடன் வாழ்ந்து வந்தனர். அப்போது இந்திய அரசின் உணர்வுகளுக்கு இலங்கை அரசு மதிப்பளித்தது. ஆனால் தற் போது மன்மோகன்சிங் தலைமையிலான காங் கிரஸ் அரசை இலங்கை அரசு மதிக்கவில்லை. இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி பிரதமர் மன்மோகன்சிங்கை மீண்டும் தமிழக முதல்வர் கருணாநிதி வலியு றுத்த வேண்டும்.

பாரதீய ஜனதாக் கட்சியின் மத்திய ஆட்சி மன்ற குழுக் கூட்டம் டில்லியில் வருகின்ற 28, 29 ஆகிய திகதிகளில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்த லுக்கான பா.ஜ.கவின் வேட்பாளர்கள் பற்றி முக்கிய முடிவு எடுக்கப்படும் - என்றார்.

# ஈழத் தமிழரைக் காக்க மத்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## தமிழக ஆளுநர் உரையில் கோரிக்கை

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தி, அவர்க ளைக் காக்க மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று நேற்றுமுன்தினம் நடந்த தமிழக சட்டசபைக் கூட்டத்தில் ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவின் தொடக்க உரையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டு வர பேச்சு போன்ற உரிய வழிமுறை வாயிலாக, அந்த நாட்டில் அமைதி தவழ்வதற்கான முயற்சி களை மத்திய அரசு இனியும் காலந்தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக் கொள்கிறது என்றும் ஆளுநர் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கையில், உள்நாட்டுப் போரால் பாதிக் கப்பட்டு பசி, பட்டினியால் வாடுகின்ற தமிழ் மக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட் களை அனுப்பிட, மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, இலங்கை [illegible] ரூபா 48 கோடி [illegible] உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பொருள்களை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக தமிழக அரசு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கையில் உள்ள தமிழர்கள் சொந்த மண்ணில் வாழ்வதற்கு சுதந்திரமின்றி, உயிருக் கும் உடைமைக்கும் பாதுகாப்பின்றி அல்லற் படுவதை அகற்றி; பேச்சு போன்ற உரிய வழி முறை வாயிலாக, அந்த நாட்டில் அமைதி தவழ் வதற்கான முயற்சிகளை இனியும் காலந்தாத் தாது மேற்கொண்டு நாளும் வதைபடும் இலங் கைத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானித்தவாறு மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொள்கிறது.

இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் வன்முறையால் தமிழ்நாட்டில் அகதிகளாக 73 ஆயிரத்து 300 பேர் முகாம்களில் தங்கியுள்ளனர்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இவர்க ளுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவித் தொகையை, மத்திய அரசின் நிதியுதவி பெற்று இரு [illegible]ள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி வி.ஈஸ்வரன் அவர்களின் மாமனார்

**அமரர் நடுவிலான் சின்னத்தம்பியின்**

மறைவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கைதடி குருசாமி வித்தியாலயம். (82071) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

# மரண அறிவித்தல்

## அருளானந்தம் மரியம்மா



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளானந்தம் மரியம்மா நேற்று முன்தினம் (21.01.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருளப்பு-ஞானமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் போல் குணநாயகம், திரேசா ஞானமணி, கமிலஸ் டொமினிக் சாவியோ (ஜேர்மனி), யோசேப் ஸ்ரனி (ஜேர்மனி), கிறிஸ்பி ஞானரஞ்சினி, கிறிஸ்ரி ஞானலதா (ஜேர்மனி), பவுஸ்ரீன் யேசுதாசன் (ஜேர்மனி), ஞானறூபி (கனடா), ஞான சுலோஜனா (ஆசிரியை, யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் லலிஸ் பிறேமினி, குணபாலசிங்கம் (அதிபர், யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை), இறஞ்சினி (ஜேர்மனி), இந்திரா (ஜேர்மனி), தங்கராசா, நவஞானம் (ஜேர்மனி), அருள்நேசம் (ஜேர்மனி), இராசநாயம் (கனடா), லூக்காஸ் (அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்- வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும் சஞ்சீவ், பிருந்துஷா, சிரஞ்சீவி, நிலாணி, நிசாந்தன், நிசாகரன், தனுசன், றெனுசன், தர்சிகா, றொயிஸ்ரன், டிலுஷா, லக்சிகா, மயூரிக்கா, கிரிசாந்த், நறேஸ், றொசான், செரான், செரோலினா, பெனெக்ஸ்ரினா, யூட்சன், ஜெனிஷா, டியூலினா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செபமாலை, எலிசபெத், சலோமை மற்றும் அன்னம்மா - மரியதாஸ், அன்ரனிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மரியம்மா, காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம், ஞானப்பிரகாசம், செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் எலிசம் புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.01.2009) சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு உடுவில் செபமாலை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கற் திருப்பலியின் பின்னர் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"டியூ மகால்",
அம்பலவாணர் வீதி,
உடுவில்.
தொ.பே.: 060 2219048

தகவல்:
குடும்பத்தினர்,
போல் குணநாயகம் (மகன்).
(82074)

# முக்கிய கலந்துரையாடல்

மீள் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டு இதுவரையும் நியமனம் கிடைக்காத பட்டதாரிகள் அனைவரையும் நாளை (24.01.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பெருமாள் கோயிலின் முன்பாக ஒன்றுகூடுமாறு பட்டதாரிகள் செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

(82069) மீள்பரிசீலனை பட்டதாரிகள்.

# தவறிவிட்டது

காளிகோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்னும் முகவரியுடைய இராசலிங்கம் கோபிக்கண்ணா என்பவரது தே.அ.அட்டை (902754164V) கடந்த 16.01.2009 வெள்ளிக்கிழமை கோப்பாய்ப் பகுதி, யாழ்.பெருமாள் கோயில் பகுதிகளில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலே குறிப்பிட்ட முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

# விவசாயக் கற்கைக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.23

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் விவசாயத்தில் இரு வருட டிப்ளோமா பயிற்சி நெறிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி, பலாலி வீதியிலுள்ள பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் விவரம் வருமாறு:

என்.குணரத்தினம் (மானிப்பாய்), என்.சங்கீதா (புலோலி), எம்.காயத்திரி (பருத்தித்துறை), எஸ்.பிரசாலினி (சாவகச்சேரி), கே.மிதுராஜா (யாழ்ப்பாணம்), ஜீ.கோபிகா (தாவடி வடக்கு), கே.பானுசா (அச்சுவேலி), கே.கஸ்தூரி (அச்சுவேலி), பீ.கம்சவாகினி (யாழ்ப்பாணம்), ஜே.காயத்திரி (யாழ்ப்பாணம்), எஸ்.இராஜேஸ்வரி (காரைநகர்), எஸ்.வதனா (வட்டுக்கோட்டை), ஜீ.சிந்துஜா (சுழிபுரம்), ஆர்.தர்மிலா (மாங்குளம்), ஆர்.குகப்பிரியா (வட்டுக்கோட்டை), வி.துர்க்கா (கொடிகாமம்), வி.சிவாகினி (யாழ்ப்பாணம்), சீ.துர்க்காயினி (வட்டுக்கோட்டை), ஏ.அபர்ணா (அச்சுவேலி), வி.மதுரிகா (யாழ்ப்பாணம்). (204)

# குழுப் புகைப்படம் எடுக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்களின் குழுப் புகைப் படம் எடுக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் கட்டடத்தின் முன்பாக உள்ள மைதானத்தில் எடுக்கப்படவுள்ளது.

2004 பதிவிலக்கத்தினை உடைய அனைத்து நுண்கலைத்துறை 4ஆம் வருட மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.23

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலயக் கும்பாபிஷேக தின அருள்விழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு சங்கற்பத்துடன் ஆரம்பமாகி முற்பகல் 10மணிக்கு 1008 சங்காபிஷேகம், சனீஸ்வர பகவான் நவகலச அபிஷேகம் ஆகியனவும் நடைபெறும்.

முற்பகல் 11 மணிக்கு உபசார பூஜை, நண்பகல் 12 மணிக்கு சீதா ராம கல்யாண வைபோகம், 12.30 மணிக்கு மங்கல உலா, 1.30 மணிக்கு மகேஸ்வர [illegible] நடைபெறும். (204)

# வர்த்தக முகாமையாளர் (106/08) பதவி வெற்றிடம்

## (31/99 சுற்று நிருபத்திற்கமைய)

மேற் குறிப்பிட்ட பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. சம்பள அளவுத் திட்டம் (கூ.வே.ஆணைக்குழுவின் 66/2006 சுற்று நிருபத்திற்கமைய 106/08ஆவது சம்பளக் குறியீடு.

11200- 14100
140X10-150X10

02. வயது: 18-45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
03. பிணை: தெரிவுசெய்யப்படுமிடத்துசங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பனவற்றினை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.
04. (1) சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(2) கணனி அறிவும், திறனும் அவசியமாக இருத்தல் வேண்டும்.
05. தகைமைகள்:
(கூட்டுறவு வேலையாளர் 108/81 சுற்று நிருபத்திற்கமைய குறியீட்டு இல. 106/06 இன் படி).

அ. கூட்டுறவுப் பணியாளர்களுக்கான 7ஆவது சம்பளத் திட்டத்தின் கீழ் முகாமைத்துவ மட்ட அல்லது மேற்பார்வை மட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர்களுக்கான 8ஆவது சம்பளத் திட்டத்தில் மேற் குறித்த முகாமை மட்ட மேற்பார்வை மட்டப் பதவி ஒன்றில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும், பங்கீடும்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் பொருள் ஏற்றுமதியும், இறக்குமதியும் ஆகிய துறைகள் ஒன்றிலோ அல்லது பலவற்றிலோ முகாமைத்துவ மட்டப் பதவி ஒன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளருக்கான (உயர்தரம்) சான்றிதழ்/ க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் பொருள் ஏற்றுமதியும், இறக்குமதியும் ஆகிய துறைகள் ஒன்றிலோ அல்லது பலவற்றிலோ முகாமைத்துவ மட்டப் பதிவியொன்றில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

* விண்ணப்பிக்கும் முறை:
இப்பதவிக்கான விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் "வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 'பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்' எனும் முகவரியிட்டு 2009.02.05ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம்.
21.01.2009 (சி/556868) பொதுமுகாமையாளர்.

# யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனை

## திறப்பு விழா

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருஷம் தைத்திங்கள் 10ஆம் நாள் இன்று (23.01.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுபவேளையில் பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கும், தபால் பெட்டிச் சந்திக்குமிடையில் அமைந்துள்ள 87ஆம் இலக்கமுடைய கட்டடத்திற்கு அன்றைய தினமே காரியாலயமும் விற்பனைக் கிளையும் இடமாற்றப்பட்டு, திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது. இவ் விழாவிற்கு வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் சமுகம் தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இல.87, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(82065)

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
யா.மா.கா.ந.வ.கூ.சங்கங்களின் சமாசம்.

# யா/இணுவில் மத்திய கல்லூரி

## முத்தமிழ் விழா

24, 25- ஜனவரி 2009 இரு நாள்கள்
முற்பகல் 8.30- பிற்பகல் 2.00 மணி வரை

தலைவர்: திரு.அ.சதானந்தன் கல்லூரி முதல்வர்

முதலாம் நாள்:
பிரதம விருந்தினர்: பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்
(தமிழ்த்துறை தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்: உயர்திரு செ.குபேரநாதன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில்)
உயர் திரு. ந.பகீரதன்
(முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்)

இரண்டாம் நாள்:
பிரதம விருந்தினர்: உயர்திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)
சிறப்பு விருந்தினர்கள்: உயர்திரு.S.B.அரசகுமார்
(சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி)
உயர் திரு. கே.கணேசலிங்கம்
(தலைவர், லயன்ஸ் கழகம், இணுவில்)
உயர்திரு. சு.இராஜமனோகரன்
(பிரதிமுகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: பேச்சு, இசை, நடனம், நாட்டிய நாடகங்கள், ஔவையார் நாடகம், காத்தவராயன் கூத்து, சத்தியவான் சாவித்திரி இசை நாடகங்கள் ஆகியன இடம்பெறவுள்ளன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம். (82068)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்ந்தது நாம் மகிழ
23 . 11 . 1959



உதிர்ந்தது நாம் கதற
24 . 12 . 2008

## அமரர் கிருஷ்ணர் வேல்முருகு
(சின்னமணி)

ஆல்போல் விழுது விட்டு
ஆண்டுகள் பல வாழ்வீர் என
ஆவலுடன் காத்திருந்தோம்
ஆசையுடன் பார்த்திருந்தோம்
பாச உறவுகளை
பாரினிலே தவிக்கவிட்டு
பாதி வயது தனில்
பரமனடி சேர்ந்தீரே!

நீலியம்பனை,
மல்லாகம்.

நெஞ்சம் கனத்த நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.
(82072)

உ



## 25ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திக் கிரியை அழைப்பும்

அன்புடையீர்

கடந்த டிசம்பர் மாதம் 31ம் திகதி புதன்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயர்

தோற்றம் 10.02.1941 மறைவு 31.12.2008

## திருமதி தனலட்சுமி - பசுபதிநாதஐயர்

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோர்க்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு

எதிர்வரும் 24.01.2009 சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பாள் கோயிலடி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

இங்ஙனம்
ப.மகேசன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் புதன்கிழமை வரையான மூன்று நாள்களில் 66 பேர் பலி; 200 பேர் காயம்

கொழும்பு, ஜன.23

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு, புதுக்குடியிருப்பு மற்றும் உடையார்கட்டு பகுதிகளைச் சேர்ந்த கிராமங்கள் பலவற்றின் மீது புதன்கிழமை பிற்பகல் 5 மணி வரையான அறுபது மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கி, ஷெல் மற்றும் பல்குழல் தாக்குதல்களால் மொத்தம் 66 பொதுமக்கள் பலியானதாகவும் 200 பேர் காயமடைந்ததாகவும் அங்கிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொது மக்கள் தஞ்சம் புகுவதற்கு பாதுகாப் பான இடம் என்று படைத்தரப்பில் அறிவிக்கப்பட்ட தேவிபுரம் மற்றும் வள்ளிபுனம் போன்ற பிரதேசங்களில் ஆட்லறி மற்றும் ஷெல், பல்குழல் ஏவுகணைகளின் தாக்குதல் களால் அப்பாவிப் பொது மக்கள் பலியானதாகவும் குண்டு அதிர்வுகள், சிதைவுகளுக்கு மத்தியில் செய்வதறியாது அவர்கள் கலங்கிப் போய், பதறிப் பீதிக்குள் மூழ்கிக் கிடக்கின் றனர் என்றும் மேலும் கூறப்படுகின்றது.

**பீரங்கித் தாக்குதலில் மட்டும் 14பேர் பலி**

புதன்கிழமை நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல்களில் மட்டும் 14 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 73 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

விசுவமடு தேராவில் மக்கள் குடியிருப்புக்கள் மீது புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 4 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

உடையார்கட்டு குரவில் பகுதியில் புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 5 பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர். சிவராஜா (வயது 42), பிரபாகரன் (வயது 27), மதியரசன் (வயது 18), ரவீந்திரன் (வயது 18), கி.தங்கம்மா (வயது 47) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

விசுவமடுப் பகுதியில் உள்ள இளங்கோபுரத்தில் புதன்கிழமை காலை 6 மணியளவில் அரச படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் கோமதி (வயது 16) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு தேவிபுரம், சுதந்திரபுரம் பொது மக்கள் குடியிருப்புக்கள் மீது புதன்கிழமை பிற்பகல் 2 மணி வரை தொடர்ச்சியாக நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் வள்ளிபுனத்தில் இயங்கும் முல்லைத்தீவு பொதுவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**சுதந்திரபுரம் தேவிபுரம் பகுதிகளில்**

சுதந்திரபுரம் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் வீச்சில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கனகரத்தினம் பாலசுந்தரம் (வயது 53) என்பவர் கொல்லப்பட்டுள்ளதுடன் அவரின் மனைவியான பாலசுந்தரம் மகாலட்சுமி (வயது 53) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

தேவிபுரம் பகுதியில் உள்ள இடம் பெயர்ந்த பொதுமக்களின் குடியிருப்புக்களை இலக்கு வைத்து புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் பல்குழல் ஷெல் வீச்சு மேற்கொள்ளப்பட்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தேவிபுரம் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ந.பிரபாகரன் (வயது 29), ராஜீவ்குமார் துஸ்யந்தினி (வயது 27), மரியாம்பிள்ளை விஜிதா (வயது 19), சபாரட்ணம் சிவமாலினி (வயது 16), மரியாம்பிள்ளை ஜீவிதா (வயது 17), கறுப்பையா சுப்பிர மணியம் (வயது 48), ஜே.அருள்மதி (வயது 18) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

**புதுக்குடியிருப்பு, உடையார்கட்டுப் பகுதிகளில்**

தேவிபுரம் - புதுக்குடியிருப்பு - மூங்கிலாறு - உடையார்கட்டு குரவில் பகுதிகளில் இடம் பெயர்ந்த பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது புதன்கிழமை நண்பகல் மற்றும் பிற்பகல் வேளையில் செறிவான பல்குழல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் சந்திரசேகரம் சிவமணி (வயது 60) என்பவர் படுகாயமடைந்துள்ளார். இவர், கேப்பாபுலவில் இருந்து இடம் பெயர்ந்து தேவிபுரத்தில் தங்கியிருந்தவர் ஆவார்.

தேராவில் - குரவில் - சுதந்திரபுரம் பகுதிகளில் நேற்றுமுன்தினம் பிற்பகல் அரச படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 31 பேர் காயமடைந்துள்ளனர்.

செல்வரூபி (வயது 24), சத்தியவதனி (வயது 28), மே.இராகவன் (வயது 24), செல்லம்மா (வயது 30), முத்துலட்சுமி (வயது 30), லீன் றெஜினா (வயது 27), அனுசாந்தினி (வயது 29), சிவராசா (வயது 42), இந்திராணி (வயது 48), மயூரன் (வயது26), லோ.அஜந்தா (வயது 29), சுஜிகரன் (வயது 28), ரவீந்திரன் (வயது 47), தமிழ்த் தேவி (வயது 30), நந்தா (வயது 21), இளமதி (வயது 20), ரோகினிமலர் (வயது 23), ஜெகன் (வயது 28), லக்ஸ்ராஜா (வயது 22), குகநாதன் (வயது 19), கேசவன் (வயது 17), இளநாதன் (வயது 23), சத்தியன் (வயது 29), ராஜ்குமார் (வயது 23); காண்டீபன் (வயது 17), தி.கிருஸ்ணா (வயது 19), மைந்தகன் (வயது 09), விமலநாதன் (வயது 38), தேன்மதி (வயது 25), சந்தனக்குயில் (வயது 27) ஆகியோர் உட்பட 31 பேர் படுகாயமடைந்தனர். மேலும் ஒருவரின் பெயர் விவரம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

விசுவமடு வள்ளுவர்புரம் பகுதியில் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஷெல் தாக்குதலில் 2 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 2 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காரைநகரைச் சேர்ந்த செல்வரத்தினம் (வயது 45), சற்குணராஜா (வயது 35) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். செல்வரத்தினம் ரதிமலர், செல்வி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

உடையார்கட்டு குரவில் பகுதியில் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அரச படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 2 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

[illegible].கஜந்தன் (வயது 15), அ.வரதராசா (வயது 18) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். அருட்செல்வன் (வயது 25), தவராசா (வயது 22), உதயகுமார் (வயது 42), கருணா (வயது 36), சுப்ரமணியம் (வயது 43), சிவதாஸ் (வயது 36) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

விசுவமடு மயில்வாகனபுரம் பகுதியில் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிய ளவில் அரச படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் சிறுமி உட்பட 4 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 4 பேர் படு காயமடைந்துள்ளனர். இதில் கொல்லப்பட்ட 4 பேரும் பெண்கள் ஆவர்.

கொல்லப்பட்டவர்களில் விஜிதா (வயது 15) என்பவர் அடையாளம் காணப்பட்டுள் ளார். ஏனையோர் நேற்றுமாலை வரை அடையாளம் காணப்படவில்லை.

முனியம்மா (வயது 72), சுப்பிரமணியம் (வயது 41), சசிகரன் (வயது 14), ரவிச்சந்திரன் (வயது 36) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்

கைவேலிப்பகுதியில் புதன்கிழமை பிற்பகல் 4.45 மணியளவில் அரச படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 2 பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர். கேதீஸ்வரன் (வயது 35), ப.விஜேந்திரன் (வயது 33) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

அரச படையினரின் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களால் பொதுமக்களின் தற்காலிக குடியிருப்புக்கள் முற்றாக அழிவடைந்துள்ளதுடன் கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளதுடன் வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

**மருத்துவமனை முற்றாக அழிந்தது**

இதேவேளை வள்ளிபுனம் பகுதியில் இடம்பெயர்ந்த நி[illegible]யில் இயங்கி வந்த முல்லைதீவு மருத்துவமனை ஆட்லறி மற்றும் பல்குழல் பீரங்கித் தாக்குதலால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெற்ற தாக்குதலில் வள்ளிபுனம் பாடசாலையொன்றில் இயங்கி வந்த மருத்துவமனையின் சத்திர சிகிச்சைப் பிரிவு மற்றும் அவசர நோயாளர் பிரிவு என்பன முற்றாக அழிவடைந்துள்ளன.

இதன் காரணமாக இம்மருத்துவமனையை நம்பியிருந்த நூற்றுக்கணக்கான காயமடைந்தவர்களும் நோயாளர்களும் நிர்க்கதிக்குள் ளாகியுள்ளனர்.

புதன்கிழமை நள்ளிரவு முதல் இம் மருத்துவமனை தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதலிற்கு உள்ளாகியுள்ளது.

எனினும் நேற்று பகல் இடம்பெற்ற தாக்குதலில் அது முற்றாக சேதமடைந்துள்ளது.

மருத்துவமனையின் பின்புற வீதியின் இரு மருங்கிலும் கொல்லப்பட்ட பலரின் உடல் கள் சிதறிக் கிடக்கின்றன என்றும் பல நோயாளர்களும், மருத்துவமனை பணியாளர்களும் பதுங்கு குழிகளுக்குள் தஞ்சமடைந் துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-சி)

## வெளிநாட்டில் இருந்து திரும்பிய கணவனைக் காணவில்லையாம்

யாழ்ப்பாணம், ஜன.23

வெளிநாட்டில் இருந்து கொழும்பு திரும்பிய தமது கணவர் கடந்த 15 ஆம் திகதியில் இருந்து காணாமற் போயுள்ளார் என அவரது மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சாளையடி மாதா கோயிலடி புதுவெளியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் சிவரூபன் (வயது-25) என்பவரையே காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு ஒன்றில் தொழில் செய்து வந்த இவர் கொழும்பு திரும்பி கொட்டாஞ்சேனை, ஜெம்பட்டா வீதியில் தங்கியிருந்த வேளை காணாமற் போயுள்ளார் என்று அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (1-25)

## அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் லொறிகளை சேதப்படுத்த வேண்டாம்

### அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.மாவட்ட மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபடும் லொறிகளை சேதப்படுத்த வேண்டாம். அவ்வாறு சேதப்படுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் உணவுக் களஞ்சியத்துக்கு அருகில் வைத்து லொறிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்ட மக்களுக்குரிய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் கப்பலில் இருந்து இறக்கப்படுகின்ற பொருள்களை களஞ்சியங்களுக்குக் கொண்டுசெல்கிற பணி யாழ். மாவட்ட தனியார் பாரவூர்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.எனினும் சில நபர்கள் புதனன்று இவ்வாறான பணியில் ஈடுபடுகின்ற 15 லொறிகளை எதுவித காரணமும் இன்றி சேதப்படுத்தியுள்ளனர்.

இவ்வன்செயல் மிகவன்மையாகக் கண்டிக்கப்படுவதுடன் இது விடயமாகத் தனியார் பாரவூர்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தங்களுடைய எதிர்கால நலன்கருதி எவருமே யாழ்.மாவட்ட மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சேவைகளுக்கு குந்தகம் விளைவிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு மாவட்ட செயலகம் தள்ளப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

தனியார் பாரவூர்திச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தொடர்ந்தும் அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-1)

## பலவந்த வரிகள், கப்பம் கேட்பது ஆகியவற்றை தமது கவனத்துக்கு கொண்டுவர அமைச்சர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.23

பலவந்தமான வரிகளுக்கோ, கப்பம் பெறும் செயற்பாடுகளுக்கோ இடமளிக்கக்கூடாது. யாராவது இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டால் உடன் எமது கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அண்மையில் பலவந்தமாக கப்பம் கோரி ஒருவர் மிரட்டி வருவதாகவும் ஏற்கனவே ஒரு தொகைப்பணம் கப்பமாக வழங்கியதாகவும் கூறி தன்னிடம் வந்து முறைப்பாடு செய்த யாழ். வர்த்தகர் ஒருவரின் கோரிக்கைக்கு இணங்கி, கப்பம் பெற்று வந்த நபரை சட்ட ரீதியாக கைது செய்ய நடவடிக்கை எடுத்தமை குறித்து தெளிவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எவரேனும் பலவந்தமாக வரியோ அல்லது கப்பமோ கோரியிருந்தால் உடனடியாகத் தமது கவனத்துக்கு கொண்டுவரும்படி பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார் - என்று அமைச்சர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## மேலும் 11 பேர் மிருசுவில் வந்தனர்

யாழ்ப்பாணம்,ஜன. 23

வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மேலும் 11 பேர் படையினரால் அழைத்து வரப்பட்டு நேற்றுமுன்தினம் மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலிவடக்கு,ஜன. 23

இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கூடை பந்தாட்டச் சங்கம் சுன்னாகம் சிலிங்கோ இன்சூரன்ஸ் ஆதரவுடன் நடத்திவரும் 15வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபரும் கூடைப்பந்தாட்ட கழக உப தலைவருமான திருமதி, ஷிராணி மில்ஸ் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப பாடசாலை, வேம்படி மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிகளின் அணிகள் பங்குபெறவுள்ளன. (86)

* * *

வலி வடக்கு,ஜன.23

இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திவரும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற வுள்ள ஆட்டத்தில்சுதுமலை நாவலர் வி. கழகமும் ஐங்கரன் வி.கழகமும் மோதவுள்ளன. (1-86)

* * *

வலி.வடக்கு,ஜன. 23

யாழ் மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கு இடையே மாவட்ட ரீதியில் நடத்திவரும் விலகல் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை கூடைப்பந்தாட்ட மைதானத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**பெண்கள்**

* அரையிறுதி ஆட்டம்- யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் பட்டப்பிளை விளையாட்டுக்கழகம்.

**ஆண்கள்**

* யாழ்ப்பாணம் சென்றல் கல்லூரி விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டுக் கழகம்.(1-86)

* * *

வலி.வடக்கு,ஜன. 23

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டுக்கழகமை தானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக்கழகம் எதிர் அளவெட்டி யுத் யூனியன் விளையாட்டுக்கழகம்.

* மல்லாகம் ஆபிரகாம் விளையாட்டுக் கழகம் எதிர் அளவெட்டி கலை ஒளி விளையாட்டுக்கழகம். (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. கவலை

கொழும்பு, ஜன. 23

இலங்கையில் மோதலில் சிக்கியுள்ள சிறுவர்களின் நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் சிறுவர் மற்றும் ஆயுத மோதலிற்கான விசேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மோதல் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த சிறுவர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் படையணிகளில் உள்ள சிறுவர்கள் குறித்து தான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

# போரை நிறுத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்-3, பத்தி 5இல் பக்கத்து நாடான இலங்கையில், உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு பசி, பட்டினியால் இலங்கை தமிழ் மக்கள் வாடுகிறார்கள் என்றும் -

இலங்கையில் நடைபெறும் போர், இனப் பிரச்சினையைத் தீர்க்க உதவாது என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்ற நமது இந்தியப் பேரரசு, பேச்சு போன்ற உரிய வழிமுறை வாயிலாக, அந்த நாட்டில் அமைதி தவழ்வதற்கான முயற்சிகளை இனியும் காலந்தாழ்த்தாது மேற்கொண்டு நாளும் வதைபடும் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று இந்த அரசு கேட்டுக் கொள்கிறது என்று குறிப்பிடப்பட்டிருப்பதை ஆழ்ந்து படித்துப் பார்த்தால், போர் நிறுத்தப்பட வேண்டும் என்பது குறித்து ஆளுநர் உரையிலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம் என்று கருணாநிதி விளக்கமளித்துள்ளார்.

# புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கைப் போல் வடக்கிலும் மாகாணசபை அமைக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாம் தொடர்ச்சியாகப் புலிகளுக்கு விடுத்துவரும் வேண்டுகோள், அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்பதுதான்.

ஆயுதங்கள் கீழே வைக்கப்படும்வரை எமது யுத்தம் தொடரும். எக்காரணம் கொண்டும் அது நிறுத்தப்பட மாட்டாது.

யுத்தம் எப்போது நிறுத்தப்படும் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. அது படையினருக்குத்தான் தெரியும்.

புலிகளின் பயங்கரவாதம் முற்றாக அழித்து ஒழிக்கப்பட்டதன் பின்பு கிழக்கைப் போன்று வடக்கிலும் மாகாணசபை அமைக்கப்படும். வடக்கு மக்கள் புலிகளின் பிடியில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ்வதற்கு வழியமைத்துக் கொடுக்கப்படும்.

தற்போது இது தொடர்பாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஆராய்ந்து வருகின்றது. இதில் கலந்துகொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர அனைத்துக் கட்சிகளுக்கும் நாம் அழைப்பு விடுத்துள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அழுத்தத்தின் கீழிருந்து செயற்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் கலந்து கொண்டு இடைநடுவில் எழும்பிச் சென்றுவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போல் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதோ தெரியாது.

சர்வகட்சிப் பிரதிநிதிகளின் தீர்வு யோசனை கிடைக்கும்வரை தற்போதுள்ள நிர்வாக முறையே வடக்கிலும் இருக்கும். - என்றார்.

# தொண்டுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் சார்ந்திருப்போரையும் உடனேயே அங்கிருந்து வெளியேற அனுமதிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இதுகுறித்து ஐ.நாவின் கொழும்பு அலுவலகம் நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் -

விடுதலைப் புலிகள் இவ்வாறு ஐ.நாவிற்காக பணியாற்றும் உள்ளூர் பணியாளர்களையும், அவர்களில் சார்ந்திருப்போரையும் அங்கிருந்து வெளியேற முடியாதவாறு அனுமதி மறுத்திருப்பதை மிகவும் கடும் தொனியில் கண்டித்திருப்பதோடு, அவர்கள் தற்போது வன்னியிலுள்ள ஐ.நாவின் வாகனத் தொடரணியோடு அங்கிருந்து வெளியேற விடுதலைப்புலிகள் அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளது. (அ-சி)

# முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"57 ஆவது படையணியினர் இராமநாதபுரம் பகுதியைக் கைப்பற்றியதன் பின்னர் விசுவமடு பகுதியை நோக்கித் தமது படை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். 55ஆவது படையணியினர், சுண்டிக்குளம் பகுதியைக் கைப்பற்றியதன் பின்னர், தெற்குப் பகுதியில் படைநடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது விடுதலைப்புலி உறுப்பினர்களின் சடலங்கள் பல கைப்பற்றப்பட்டன. அதேவேளை, விடுதலைப்புலிகள் பயணித்த ட்ரக்டர் ஒன்றை நோக்கிப் படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் பயணித்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் காயமடைந்தனர்.

வரைபடம் கண்டெடுப்பு

முல்லைத்தீவு பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளம் ஒன்றைப் படையினர் கைப்பற்றியுள்ளனர். அங்கு வரைபடம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இராணுவ முகாம்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் முகாம்கள் உட்பட சகல விவரங்களும் அந்த வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

2,950 பேர் இதுவரை அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி வந்துள்ளனர். கடந்த புதனன்று 17 பேர் சுண்டிக்குளம் பிரதேசத்தைீ வந்தடைந்தனர். அதே போன்று கொக்குதொடுவாய் பகுதியில் 17 பேர் படகில் வந்து சேர்ந்துள்ளனர்.

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் 35 ஆவது கிலோ மீற்றரில் இருந்து 32 ஆவது கிலோ மீற்றர் மைல் கல் வரையிலான சுமார் 8 கிலோ மீற்றர் நீளமான பிரதேசத்தின் வடக்குப் பக்கமாக உள்ள சுமார் 4 கிலோ மீற்றர் தூரமுள்ள பகுதியையே பாதுகாப்புப் பிரதேசமாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர் - என்றார்.

# யுத்த நிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகளை வழங்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 நாள்களாக வன்னியிலுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படுவது யுத்தநிறுத்தம் ஆகும். மோதல் இடம்பெறும் பகுதிகளிலுள்ள மக்களுக்கு நிவாரண, மருத்துவ உதவிகளை வழங்குவது அவசியமானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் அரசியல் உடன்பாட்டிற்கு வரவேண்டும் எனவும் -

இராணுவ வழிமுறைகள் மூலமாக இம் மோதலிற்குத் தீர்வுகாண முடியாது எனவும் வலியுறுத்தியுள்ளார். (அ-சி)

# மனிதாபிமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் அவர்களுடைய அரசியல் கரிசனைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பும் அரசுக்குள்ளது.

இலங்கையின் மனிதாபிமான நிலை மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிகரிப்பது குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இது குறித்த எமது கவலையை உயர் மட்ட அளவில் தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்றோம்.

மோதல் இடம்பெறும் பகுதிகளில் 2 லட்சம் முதல் 3 லட்சம் இடம் பெயர்ந்த மக்கள் உள்ளனர் என ஐக்கிய நாடுகள் மதிப்பிடுகின்றது.

மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான வாகனத் தொடரணிகள் சென்றாலும் கூட இந்த வசதிகள் போதுமானவையல்ல என்ற நம்பத்தகுந்த தகவல்கள் உள்ளன.

இலங்கை இராணுவத்தினரின் வெற்றிகள் காரணமாக இடம்பெயர்ந்தோர் மிகக் குறுகிய பகுதிக்குள் வாழ வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இந்த நிலை மோசமடைந்தால் மனிதாபிமானத் தேவைகள் அதிகரிக்கும்.

எதிர்வரும் வாரங்களில் இலங்கையின் மனிதாபிமான நிலை குறித்து ஆராய்வதற்கு எமது சர்வதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மனிதாபிமான நிபுணர் ஒருவரை அனுப்பவுள்ளோம்.

இலங்கையின் வடபகுதியில் இடம்பெயர்ந்தோருக்கு என நாம்ஒதுக்கியுள்ள மனிதாபிமான நிதியைப் பயன்படுத்துவது தொடர்பாக இவர் எமக்கு அறிக்கையிடுகின்றார்.

இலங்கையில் தொடர்ந்தும் ஆள்கடத்தல்களைக் காணும்போது வன்முறைகளும், மிரட்டல்களும் இடம்பெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுயாதீன மனித உரிமைத் தகவல்களை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் இல்லாமல் உண்மை நிலையை அறிவது கடினம்.

மனித உரிமை பிரச்சினைக்குத் தீர்வு காண தீர்க்கமான நடவடிக்கையை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்தும் கேட்டு வருகின்றோம் - என்றுள்ளது. (அ-சி)

# பாதுகாப்பு வலயம், ஆஸ்பத்திரி மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிச்சயமாக விடுதலைப்புலிகளே தாக்குதலை நடத்தி இருப்பார்கள் அவர்கள் அவ்வாறு செய்யத்தக்கவர்கள்'' என்று ராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கூறியதாக அசோசியேற்றற் பிறஸ் செய்தி ஏஜென்சி தெரிவித்தது.

வள்ளிபுனத்தில் இயங்கிய ஆஸ்பத்திரியில் நெஞ்சுநோ காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த 17 வயது இளைஞன் ஒருவன் - ஷெல் வீச்சு ஆரம்பமான வேளை தான் வார்ட்டில் காலை உணவு உட்கொண்டிருந்ததாகவும் தான் தங்கியிருந்த வார்ட்டின் மீது நேற்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகவும் ஷெல் சிதறல் பட்டு காயம் ஏற்பட்டதாவும் கூறினார். ஆஸ்பத்திரி ஊழியர்கள் காயத்துக்கு மருந்து கட்டிய போதிலும் அக்கம்பக்கம் எங்கும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் வேறு இடத்துக்கு மாற்ற முடியவில்லை என்றும் மோசஸ் பிரதீபன் ஏ.பி. செய்தியாளருக்கு தொலைபேசி மூலம் கூறினார்.

நேற்றைய தாக்குதல் சம்பவத்துடன் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் வன்னியில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை 88 ஆகவும் காயமடைந்தோரின் எண்ணிக்கை 329 ஆகவும் அதிகரித்துள்ளது என்றும் இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லம், சைவச்சிறார் இல்லம் மற்றும் மகாதேவ ஆச்சிரமம் ஆகியன மீது நேற்று வியாழக்கிழமை காலை செறிவான ஆட்டிலெறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 34 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இனிய வாழ்வு இல்லம் மாற்று வலுக் கொண்டவர்களுக்கான இல்லமாக அனைத்துலக அமைப்புக்களின் தொடர்புகளுடன் இயங்கி வருகின்றது.

மகாதேவா ஆச்சிரமம் மற்றும் சைவச்சிறார் இல் லத்தை நோக்கி நேற்று காலை 7.55 மணிதொடக்கம் 8.10 மணி வரை செறிவான பல்குழல் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதில் இனிய வாழ்வு இல்லம், சைவச் சிறார் இல்லம், மகாதேவா ஆச்சிரமம் ஆகியன மீதும் வீதியில் இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் மற்றும் இடம்பெயர்ந்தோர் வாழ்விடங்கள் ஆகியனவற்றின் மீதும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதில் இல்லங்களில் இருந்தவர்கள், வீதிகளில் பயணித்தவர்கள் மற்றும் இடம் பெயர்ந்து வந்து தங்கியிருந்தவர்கள் உள்ளிட்ட 10 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன், 34 பேர் படுகாயமடைந்தனர்.

வள்ளிபுனம் பாடசாலையில் இயங்கும் முல்லைத்தீவு பொதுவைத்தியசாலையை நோக்கி நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் செறிவான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதன்போது வைத்தியசாலை ஆண்கள் விடுதி மீது ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. இத்தாக்குதல் நடைபெற்றபோது வைத்தியசாலையில் பெரும் எண்ணிக்கையில் நோயாளர்கள் இருந்தனர்.

இதில் வைத்தியசாலையில் தங்கியிருந்த இருந்த 5 நோயாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தாக்குதல்களில் - ர.சீரணி (வயது 04), ர.சாரங்கன் (வயது 06), க.கோசிகன் (வயது 02), ந.மகேந்திரராசா (வயது 42), வே.பாலசுந்தரம், பா.புனிதவதி, ஆனந்தம், ஜெயகாந்தன் ஜெயரூபி ஆகியோர் கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சிறிலங்காப் படையினர் நடத்திய தாக்குதல்களில் காயமடைந்தோர்விபரம்வருமாறு:

ச.முருகையா (வயது-66), செ.பிரபாகரன் (வயது-40), ஜே.ஜெனிற்றா (வயது-14), ச.பரிதினி (வயது இரண்டரை), ஜே.விக்னேஸ்வரி (வயது-32), அ.றகுவர்னன் (வயது-29), தெ.தர்சன் (வயது-14), ப.குமார் (வயது-38), த.தருமலிங்கம் (வயது-30), க.இராசதுரை (வயது-57), பு.மகிழினி (வயது- 13), நா.மலர்க்காந்த பூபதி (வயது-75), கிருஸ்ணகுமார் (வயது-36), க.தர்மலிங்கம் (வயது-34), மலர் சாந்தபூபதி (வயது-75), கிருஸ்ண குமார் (வயது-36).

க.தர்மலிங்கம் (வயது- 34), மலர் சாந்தபூபதி (வயது-73), கனகலிங்கம் சஜிதா (வயது-12), அ.சரண்யா (வயது-13), செ.நந்தகுமார் (வயது-15), ஜெ.ஜனனி (வயது-17), அ.அனுரா (வயது-29), ந.ஜோதிலக்ஸ்மி (வயது-68), சிதம்பரப் பிள்ளை தீபன் (வயது-22), இ.சத்திய தாஸ் (வயது-21), சு.சந்திரலீலா (வயது-48), அ.குமார் (வயது-23), இ.சுபாகரன் (வயது -28), க.தவமலர் (வயது-43), க.சசிகரன் (வயது-19), சூ.கென்சன் யூட் (வயது-32).

விஜயபாலன் (வயது-41), ச.செல்லத்துரை (வயது-67), கே.அபியுகா (வயது -06), சி.விமலாதேவி (வயது-46), சி.கணேசமூர்த்தி (வயது-49), சி.சிவசிதம்பரம் (வயது-74), ப.பிரசாந் (வயது-18), அ.ரவி (வயது-42), வ.லிங்கநாதன் (வயது-37), ச.ரம்சோன் (வயது-42), சி.அபிநயா (வயது-02), க.ரேவதி (வயது-15), பி.மல்லிகாதேவி (வயது-48), வ.பூங்கோதை (வயது-40), வை.சின்னத் தீபனா (வயது-60), பா.கவிதா (வயது -28), வானதி (வயது-13), அ.ரவிகரன் (வயது-29).

தேவிபுரம் பெரியகுளம் பகுதியில் புதன் இரவு நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர், சிவசாமி சகுந்தலா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, விசுவமடு மயில்வாகனபுரம் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்றுக் காலை 8 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர் தா.டேவிட் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

செ.டயஸ்குமார் (வயது-19), செ.காந்தகுமார் (வயது-12), ஊ.ஜெரோஸ் (வயது-13), எ.விக்டோரியா (வயது-33), ஜெனிற்றா (வயது-18), விஜயநிர்மலா (வயது -40) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

உடையார்கட்டு தெற்குப் பகுதியில் உள்ள வயல்வெளியில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள பொதுமக்கள் வாழ்விடம் மீது நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 4 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சுமதி (வயது-33), நா.வேந்தன் (வயது-15), தவராசா (வயது-47) மற்றும் 4 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

நிரோஜினி (வயது-09), நிருசா (வயது -08), சீரா (வயது-29), பார்த்தீபன் (வயது-14), ஜெ.ஜெயரூபி (வயது-28), ஞானசேகரம் (வயது-46), கோகிலராணி (வயது-49), பாஸ்கரன் (வயது-34), கவிராஜ் (வயது-30). (அ-சி)

(மற்றொரு செய்தி 11 ஆம் பக்கத்தில்)

கற்சுமி வெளியீடு
கற்சுமி வெளியீடுகளை புதிதாகப் பெறவிரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்க. பெற்றோர்/ மாணவர்கள் பதிவு செய்யுங்கள்.
☎ 2227442

தேவை
ஓவ்செற் இயந்திர இயக்குனர் (பயிலுநரும் விரும்பத்தக்கது)
அலுவலக உதவியாளர் (ஆண்)
24,25.01.2009 சனி, ஞாயிறு நேரில் வரவும் (9.00 - 12.00 வரை)
அகரம் கணினி பதிப்பகம்
(தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக) பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Microsoft
Systems Engineer MCP - MCSE
A+ (ComTIA Hardware Technician-AUSTRALIA)
கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.
16000 DISCOUNT 25.01.2009 வரை
புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.01.2009 07.00AM/12.00PM
Become an Engineer
விபரங்களுக்கு நேரில் 324, பலாலி வீதி, MCS Supported By
Bus Root - 764

PERSONAL CLASSES
364, Stanley Road, Jaffna (Near DMI)
GAQ, BA Part- I, Final
தமிழ் திரு.தர்மராஜா
Drama திரு.சிவகுமன்
Hin.Cul திரு.சிற்நாவ்
Eco திரு.பாபாவ்
GAQ, BA Part-I ENGLISH Revision and Paper
Mr.Maheswaran (Dip.in.English)
ஆரம்பம் நாளை 24.01.2009 காலை 9 மணி

தேவை
அலுவலக உதவியாளர் (Clerk) ஆண் தேவை. நேரில் வரவும்.
நாவலர், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

நாளை ஆரம்பம்
A/L
கணிதம், வணிகப்புள்ளி விவரவியல்
T.தவசேகர்
மாலை 3 மணி
DMI, நாவலர் வீதி, யாழ்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# IIS CITY CAMPUS

#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: iiscitycampus.com

IIS IIS IIS IIS




IIS City Campus நிறுவனமானது தகவல் தொழில்நுட்பம், வணிக முகாமைத்துவம் மற்றும் பொறியியல் துறைகளில் உயர்கல்வியை வழங்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் உயர்கல்வி நிறுவனமாகும். குடாநாட்டு மாணவர்களினதும், மக்களினதும் மனங்களில் நம்பகரத்தன்மையான சேவையினூடாக தனக்கென ஓர் தனித்துவமான இடத்தினை உருவாக்கிக்கொண்ட IIS City Campus நிறுவனம் , குடாநாட்டு மாணவர்களின் எதிர்பார்ப்புக்களையும் எதிர்காலத்தினையும் கருத்திற் கொண்டு காலத்தின் தேவைக்கு ஏற்ப உலகில் முன்னணி வகிக்கும் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களுடன் இணைந்து நவீன தொழில்நுட்பங்கள்,பாடவிதானங்களைக் கொண்ட புதிய புதிய கற்கைநெறிகளினை வருடந்தோறும் அறிமுகப்படுத்தி வருகின்றது.சர்வதேச தரம் வாய்ந்த இக்கற்கைநெறிகளினை தென்பகுதி சென்று, குறிப்பாக கொழும்பில் கற்கவேண்டிய நிலையை முற்றாக மாற்றி,பெற்றோரின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து கொண்டே தமது சொந்தப் பிரதேசத்தில் குறைந்த செலவுடன் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பினை IIS City Campus நிறுவனம் ஏற்படுத்தித்தந்துள்ளது.

IISCC

IIS City Campus இன் தனித்துவத்திற்கு அங்கீகாரங்களே சான்று:

## HND in Computing

edexcel INTERNATIONAL — BTEC



IIS CITY CAMPUS நிறுவனமானது பிரிட்டனின் Edexcel இனால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பயிற்சி மையமாகும். Edexcel என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும். இவ்வமைப்பு உலகளாவிய ரீதியில் தொழில்சார் வல்லுநர்களை உருவாக்குவதற்கென, தமது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களினூடாக BTEC Higher National Diploma பயிற்சி நெறிகளை நடாத்தி வருகிறது. BTEC HND (Higher National Diploma) என்பது கணனித் துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சிநெறியாகும். BTEC HND பட்டமானது சர்வதேச அங்கீகாரம் பெற்ற பட்டமாகும். Edexcel அங்கீகாரம் உள்ள நிறுவனங்களின் தரப்படுத்தலில் அதிஉயர் 'A' தரத்தினைப்பெற்று இலங்கையில் உள்ள முதன்மை நிறுவனங்களில் ஒன்றாக IIS CITY CAMPUS விளங்குகின்றது. கடந்த சில வருடங்களாக IIS CITY CAMPUS இல் நடாத்தப்படும் BTEC HND கற்கைநெறியில் இணைந்து கொள்வதில் யாழ்குடாநாட்டு மாணவர்கள் பெரிதும் அக்கறை காட்டிவருகின்றனர். அறிவுத்துறைசார்ந்ததும் தொழில்துறைசார்ந்ததுமான கணணித்திறன்களை மாணவர்களுக்கு இக்கற்கை நெறி வழங்குகின்றது.இக்கற்கைநெறியினை வெற்றிகரமாக பூர்த்திசெய்துகொள்ளும் மாணவர்கள் தமது பட்டக்கல்வியின் இறுதியாண்டினை பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். அல்லது இலங்கையில் உள்ள சர்வதேச பல்கலைக்கழகங்களின் பயிற்சிமையங்களிலோ அல்லது கொழும்பிலுள்ள Sri Lanka Institute of Information Technology (SLIIT) நிறுவனத்திலோ தொடர்வதற்கான வாய்ப்பினை IIS நிறுவனம் ஏற்படுத்திக்கொடுக்கின்றது. BTEC HND பட்டம் 2 வருட கல்விப்போதனையைக் கொண்டது. இப்பயிற்சியின் முடிவில் BTEC HND பட்டம் பிரித்தானியாவின் Edexcel நிறுவனத்தினால் வழங்கப்படுவதுடன் ஜீ.சீ.ஈ. உயர்தரதகமையுடன் தகவல்தொழில்நுட்ப உலகில் எதிர்காலத்தை தேடும் மாணவர்களுக்கு இது மிகவும் பொருத்தமானது. க.பொ.த உயர்தரத்தில் குறைந்தது 2 பாடத்திலாவது சித்திபெற்றிருப்பது இப்பயிற்சியைப் பெறுவதற்கான அடிப்படைத்தகுதியாகும். இவ் HND கற்கை நெறியினை மாணவர்களின் தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப 3 வேறு பட்ட துறைகளில் IIS CITY CAMPUS வழங்குகின்றது. இவை Edexcel இன் புதிய பாடவிதானங்களை உள்ளடக்கியவையாகும்.

- HND in Computing (General)
- HND in Computing (ICT System Support)
- HND in Computing (Software Development)

## HND in Quantity Surveying

edexcel INTERNATIONAL — BTEC

இன்றைய நவீன உலகிலும் சரி இலங்கையிலும் சரி கட்டட நிர்மாணத்துறை மிக வேகமாக வளர்ச்சி கண்டுவரும் தொழில்துறையாக உள்ளது. புதிய தொழில்நுட்பங்களும் புதிய துறைசார் அறிவும் அதன் வெற்றியின் வளர்ச்சிக்குக் காரணங்களாகவுள்ளன. அதிக வருமானமும் உள நிறைவும் தரும் உயர் தரத்தினை தொழில் வாய்ப்புக்களை நாடுவோர்க்கு வேறெந்தத் துறையையும் விட கட்டுமானத்துறையே அதிக வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றது. கட்டுமானத்துறையை எடுத்துக்கொண்டாலும் அதில் இன்று முன்னணி வாய்ப்புக்களைத் தருவது கணிய அளவையியல் (Quantity Surveying) துறையாகும். British Higher National Diploma in Quantity Surveying கற்கைநெறியானது பிரித்தானியாவின் Edexcel International, UK, இலங்கை கணிய அளவையியல் நிறுவனத்தின் (Sri Lanaka Institute of Quantity Surveys) அங்கீகாரத்துடனும் கொழும்பிலுள்ள முன்னணி உயர்கல்வி நிறுவனமாகிய ICBT Campus இன் அனுசரணையுடன் IIS City Campus இல் நடாத்தப்பட்டு வருகின்றது. BTEC HND in QS பட்டம் 2 வருட கல்விப்போதனையைக் கொண்டது. இப்பயிற்சியின் முடிவில் BTEC HND பட்டம் பிரித்தானியாவின் Edexcel நிறுவனத்தினால் வழங்கப்படும்.இக்கற்கைநெறியைப் பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்கள் B.Sc.(Hons) எனும் பட்டக்கல்விக்கான இறுதியாண்டு கல்வியை பிரித்தானியாவின் 6 நட்சத்திரப் பல்கலைக்கழகமாகிய Salford பல்கலைக்கழகத்திலோ அல்லது 150க்கு மேற்பட்ட நிறுவனங்களில் ஒன்றிலோ தொடர முடியும். இதன் மூலமாக RICS (Royal Institution of Chartered Surveyors, UK) தராதரத்தினைப் பெற்றுக் கொள்வது ஒரு இலகுவான வழி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



## Bachelor of Information Technology

BIT — UCSC



கொழுப்பு பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட தகவல்தொழில்நுட்பமானி (BIT – Bachelor of Information Technology) வெளிவாரி கற்கை நெறியானது எமது நிறுவனத்தாலும் நடாத்தப்பட்டு வருகின்றது. இக் கற்கை நெறியின் அறிமுகமானது தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் IIS நிறுவனம் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு பட்டக்கல்வியை வழங்கக்கூடிய வளங்களைக் கொண்ட நிறுவனம் என அடையாளப்படுத்தப்பட்டது அதுமட்டுமல்லாது நிறுவன மாணவர்களின் சிறப்பான பெறுபேறுகள் இலங்கையின் பல்வேறு மட்டங்களிலும் வியந்து பேசப்பட்டது. இக்கற்கை நெறியின் முதலாம் வருடத்தை பூர்த்தி செய்ததும் Diploma in Information Technology என்னும் சான்றிதமையும் , இரண்டாம் வருடத்தை பூர்த்தி செய்ததும் Higher Diploma in Information Technology என்னும் சான்றிதமையும்,மூன்றாம் வருடப்பூர்த்தியில் Bachelor of Information Technology என்னும் சான்றிதழையும் இலகுவாகப் பெறக்கூடியதாக இக்கற்கை நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

## Master of Business Administration



சிக்கிம் மணிப்பால் பல்கலைக்கழகம்(SMU)ஆனது இந்திய அரசின் மனிதவள அபிவிருத்தி அமைச்சினாலும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்டது. SMU வின் பட்டங்கள் டிப்ளோமாக்கள் சான்றிதழ்கள் யாவும் இந்திய பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பில் (AIU) உள்ள எல்லாப்பல்கலைக்கழகங்களினாலும் அங்கீகரிக்கப்பட்டது. SMU க்கு கிடைத்துள்ள அங்கீகாரத்தின் படி அது நாடளாவிய ரீதியிலும் வெளிநாடுகளிலும் தொலைக்கல்வி முறையில் பாடநெறிகளை நடாத்தவும் தகமை பெற்றுள்ளது. SMU வானது வழமையான கல்விசார் நெறிகளுக்கப்பால் தொழில் சார் பாட நெறிகளையும் தொலைக்கல்விப்போதனையூடாக நடாத்துகின்றது. கல்வியை மக்கள் மத்தியில் பரவலாக்குவதற்கும் , அதிகரித்து வரும் தொழில்சார் வல்லுநர்களுக்கான தேவையை நிறைவு செய்யவுமென இந்தப் பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன.சிக்கிம் மணிப்பால் பல்கலைக்கழகம் வழங்கும் MBA பயிற்சி நெறியானது,தொழிற்துறை,வர்த்தகம் மற்றும் முகாமைத்துவப்பதவிகளை நாடுவோர்க்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முழுமையான உயர் முகாமைத்துவப் பயிற்சி நெறியாகும் .இந்நெறியின் முக்கிய பாடங்கள் யாவும் முகாமைத்துவக் கல்விநெறிகளில் அறிவையும் திறனையும் வளர்ப்பதனை நோக்கமாகக் கொன்டவை .

## CAD & BS

### Diploma in Computer Aided Drafting & Building Studies

கட்டடத்தொழில்நுட்பவியலாளர்கள், கட்டடத்தொழில்நுட்ப மாணவர்கள் க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கத் தக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி. இக்கற்கை நெறி இத்துறையில் உங்கள் உயர்கல்வியை தொடரவோ அல்லது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவோ ஓர் சிறந்த அத்திவாரமாகும்.

## CBM

### Diploma in Contemporary Business Management

இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நவீன முகாமைத்துவத்தின் எண்ணக்கருக்களையும், சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களையும் சிறந்த முறையில் பயன்படுத்ததக்கவகையில் வடிவமைக்கப்பட்ட கற்கை நெறியாகும். இக்கற்கை நெறி இத்துறையில் உங்கள் உயர்கல்வியை தொடரவும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கணினிக் கல்வி - நீங்களும் பயிலுங்கள்

யாழ்.மாவட்டத்திலே பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் அழியாச் செல்வமாகிய கல்வியை மாணவச் சமூகம் தமது கண்ணிலும் மேலாகப் பேணிக்காத்து வருகின்றது. தமது சிறப்பான கல்விச் செயற்பாடுகளின் மூலம் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் குடாநாட்டு மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருவது எமக்கு பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிப்பதோடு வெளியார்களுக்கு வியப்பினையும் அளிக்கின்றது.

எமது இளைய சந்ததியினரின் எதிர்காலத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்த வல்ல அவர்களின் உயர்கல்வி தொடர்பாக இக்கட்டுரை சில விளக்கங்களைத் தருவதோடு விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் நோக்கிலும் அமைகின்றது.



அறிவு சார்ந்த பொருளாதார முறைமையை அடிப்படையாகக் கொண்ட இந்த உலக மயமாக்கலின் கீழ் இளைய தலைமுறையினர் அனைவருக்கும் உயர்கல்வியானது மிக அடிப்படையான தொன்றாகக் கருதப்படுகின் றது. இந்நிலையில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட் சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள இச் சந்தர்ப்பத்தில் குடாநாட்டு மாணவர்களில் சில நூறு மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிகள் கிடைத்ததையிட்டு ஆறுதலடையும் அதேவேளையில், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத பல நூறு மாணவர்களின் எதிர் காலம் தொடர்பாகச் சிந்திக்க வேண்டிய கடப் பாடு பெற்றோர்களுக்கும் குடாநாட்டின் கல்விச் சமூகத்தினருக்கும் உள்ளது. இந்த நிலையில் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக மாணவர்கள் எடுக்கும் முடிவு அவர்களின் எதிர்காலம் தொடர்பில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத் தக்கூடியது என்பதைப் பெற்றோர்கள் மறந்து விடக்கூடாது.

பல்கலைக்கழக அனுமதியைத் தவற விட்ட மாணவர்கள் தமது கல்விக்காலதத்தினை வீணடிக்காது தமக்கென ஒரு சிறந்த எதிர்காலத்தினை உருவாக்கிக் கொள்ள முன்வர வேண்டும். இன்றைய கால கட்டத்தில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள் பல்வேறு துறை சார்ந்தவர்களினாலும் பல்வேறு மட்டங்களில் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் அரச, தனியார் துறை உயர் கல்வி நிறுவனங்களின் பங்கு அளப்பரியது. குறிப்பாக அரச உயர்கல்வி நிறுவனங்களான திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பல்கலைக்கழகம், உயர் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கல்வியியல் கல்லூரி என்பன தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா, உயர் தேசிய டிப்ளோமா மற்றும் பட்டக்கல்விக்கான வழிகளையும் சிறந்த முறையில் வழங்கி வருகின்றன. அதுமட்டுமல்லாது காலத்தின் தேவைக்கேற்ப புதிய புதிய கற்கைநெறிகளையும் அறிமுகப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இருந்த போதிலும் இந்நிறுவனங்களினால் மாணவர்களின் தேவைகளை முழுமையான முறையில் பூர்த்தி செய்துகொள்ள முடியாமலுள்ளது. காரணம் மாணவர்களின் தேவை ஒப்பீட்டளவில் அதிகமாகவும் நிறுவனங்களினால் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப் படுவதும் ஆகும்.

## பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கும் வளமான வாழ்வு கணனிக் கற்கைநெறிகளூடாகச் சாத்தியம்

